www.tamilarangam.net

# ஊழலும் ஊழலின் பரிமாணங்களும்

## (CORRUPTION AND ITS DIMENSIONS)

பேராசிரியர் பி.எஸ்.பன்னீர் செல்வம்

**மாற்று வளர்ச்சி ஆராய்ச்சி மையம்**
11/53, சீனிவாச நகர் இரண்டாம் குறுக்குத் தெரு
கொளத்தூர் – வில்லிவாக்கம்
சென்னை – 600 099.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# ஊழலும் ஊழலின் பரிமாணங்களும்

## (CORRUPTION AND ITS DIMENSIONS)

பேராசிரியர் **பி.எஸ். பன்னீர் செல்வம்**

**மாற்று வளர்ச்சி ஆராய்ச்சி மையம்**
**Center for Alternative Development Studies**
11/53, சீனிவாச நகர் இரண்டாம் குறுக்குத்தெரு
கொளத்தூர் - வில்லிவாக்கம்
சென்னை - 600 099
தொ.பே. (044) - 650 0802
e-mail : pspselvam@yahoo.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஊழலும் ஊழலின் பரிமாணங்களும் (Corruption and its Dimensions)** |
| ஆசிரியர் | : | பேராசிரியர் பி.எஸ். பன்னீர் செல்வம் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் |
| வெளியீட்டு நாள் | : | மார்ச், 2001 |
| உரிமை | : | பேராசிரியர் பி.எஸ். பன்னீர் செல்வம் |
| பதிப்புரிமை | : | மாற்று வளர்ச்சி ஆராய்ச்சி மையம், சென்னை–99 |
| நூல் கட்டு | : | தாள் அட்டை |
| நூலின் அளவு | : | 17 செ.மீ x 9.7 செ.மீ |
| எழுத்து | : | 12 புள்ளி |
| பக்கம் | : | 49+7 |
| படிகள் | : | 2000 |
| மின் அச்சுக் கோர்ப்பு | : | டாமியா லேசர் பிரிண்ட்ஸ், சென்னை – 2. |
| அச்சிட்டோர் | : | டாமியா லேசர் பிரிண்ட்ஸ்,<br>29, வாலாஜா சாலை, சென்னை– 600 002.<br>தொ.பே. : 841 00 35 |
| வெளியீட்டாளர் | : | மாற்று வளர்ச்சி ஆராய்ச்சி மையம்<br>11/53, சீனிவாச நகர் இரண்டாம் குறுக்குத்தெரு<br>கொளத்தூர் – வில்லிவாக்கம்,<br>சென்னை – 600 099.<br>தொ.பே. (044) – 6500802<br>e-mail : pspselvam@yahoo.com |
| பொருள் | : | சமூக – அரசியல் – பொருளாதாரம் |
| விலை | : | ரூ. 20/– |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காணிக்கை

என்னைப் பெற்று, வளர்த்து எனக்கு ஒரு வாழ்க்கையினையும் எதிர்காலத்தையும் தந்தருளிய என் அன்னையார் திருமதி. எஸ். சூசைமேரி அம்மாள் அவர்களுக்கும், என் தந்தையார் தலைமை ஆசிரியர் ம. ஸ்தனிஸ்லாஸ் அவர்களுக்கும், இச்சிறு நூலை காணிக்கையாக்குகிறேன்.

*பி.எஸ்.பி.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஜி.கே. மூப்பனார்**, எம்.பி.,
தலைவர்.
தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்)

சத்தியமூர்த்தி பவன்,
40, திரு.வி.க. சாலை, சென்னை–2.
தொலைபேசி : 858 3945,858 3949
ஃபேக்ஸ் : 91–044–9523003

தேதி : 26–05–2000

# அணிந்துரை

உலக மக்கள் அத்தனை பேருக்கும் மிகவும் பழகி விட்ட ஒரு சொல்லாக ஊழல் என்பது விளங்குகிறது. வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளிலும் பல்வேறு வகையான வடிவங்களில் ஊழல் தலை விரித்தாடி வருகிறது. ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் எங்கும் பரவி வரும் ஊழலானது, அந்தந்த நாடுகளின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதிக்கிறது என்பதை நாம் நன்றாக அனுபவபூர்வமாக உணர்ந்து இருக்கிறோம். ஆகவே நாட்டின் முன்னேற்றமும், ஊழல் ஒழிப்பும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவை.

இந்நிலையில் ஊழலின் தொடக்கம் – ஊழல் பரவும் முறை – ஊழலை ஒழிக்கும் வழி, இவை பற்றி தர்க்க ரீதியாக ஆராய்வது பயனுள்ள முயற்சியாகும்.

பேராசிரியர் திரு. பி.எஸ். பன்னீர் செல்வம் அவர்கள் மிகுந்த முயற்சிகளை மேற்கொண்டு **"ஊழலும், ஊழலின் பரிமாணங்களும்"** என்ற தலைப்பில் அரிய ஆராய்ச்சி நூலை எழுதி வெளியிட்டுள்ளார்.

பழங்காலத்தில் இருந்தே **"ஊழல்"** எனும் தீமை இருந்திருப்பதை எடுத்துக்காட்டுவதோடு நின்று விடாமல், தற்காலத்தில் நடைமுறையில் உள்ள வர்த்தகம் மற்றும் தொழில் வளர்ச்சிகளால் எப்படி ஊழல் வளர்கிறது என்பதை நூல் ஆசிரியர் தெளிவாக விளக்குகிறார். அரசு நிதி ஆதாரத்துக்கு இணையாக வளரும் நிழல் பொருளாதார சக்திகள் மட்டுமின்றி, அரசியல் மட்டத்திலும் தன்னல முனைப்போடு செயல்படக் கூடிய உள்ளாட்சி அமைப்புகளிலும் கூட ஊழல் குடியேறி இருப்பதையும் பேராசிரியர் பன்னீர்செல்வம் சுட்டிக் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"சீரிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமப் பஞ்சாயத்துக்கள், கிராமக் குடியரசுகளாக மாற வேண்டும். அப்போது தான் ஊழல் பெருமளவு குறையும்"** என்று இந்நூல் ஆசிரியர் கூறியிருப்பது சிறந்த சிந்தனையின் வெளிப்பாடு ஆகும்.

சிறிய நூல் ஆனாலும் சிறப்பான நூல்களின் வரிசையில் சீரிய இடம் பெறத்தக்க நூலாக **"ஊழலும், ஊழலின் பரிமாணங்களும்"** என்கிற இந்த நூல் விளங்குகிறது. இந்நூல் ஆசிரியர் பேராசியர் பன்னீர் செல்வத்திற்கு எனது பாராட்டுக்கள்; நல்வாழ்த்துக்கள்.

**(ஜி.கே. மூப்பனார்)**

SEELAN BOOKS NORWAY SIGNATURE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் முகவுரை

**'பேரன்புடையீரே, பெற்ற தாய்மாரே, நல்லிளங் சிங்கங்களே'** என, புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் அவர்களின் கவிதை வரிகளோடு, நெஞ்சார்ந்த வணக்கம் கூறி, என்னுடைய இந்த 4–வது நூலினை, நான் தமிழார்ந்த நெஞ்சங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

இச்சிறு நூல், இன்று நிலவிடும், சமூகப் – பொருளாதார – அரசியல் சூழலுக்கு ஏற்ற ஒன்று என நான் கருதுகிறேன். எந்த ஓர் அரசியல் தலைவரையும், போற்றிப் புகழ்ந்து, அர்ச்சனை செய்திடவோ, மாறாக, புழுதி வாரித் தூற்றிடவோ, இச்சிறு நூல் எழுதப்படவில்லை. என்றும் மாறுவதையே மாறாத நியதியாகக் கொண்ட சமூகத் தளத்தில், தொடர்ந்து உருவாகும் சமூகப் – பொருளாதார – அரசியல் மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு, எழுதப்பட்டதே இந்நூல்.

இந்நூலினை எழுதிடப் பெரிதும் தார்போட்டு என்னை ஊக்குவித்தவர்கள் சென்னை, அடையாறு, **வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் எம். தங்கராஜ்** மற்றும் **கும்பகோணம், அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர். கே. சிவப்பிரகாசம்** ஆகியோர். இருவருமே என்னுடைய முன்னாள் மாணவர்கள். இவர்கள் இருவரும், வளர்ந்து வரும் சமூக–விஞ்ஞானிகள். ஏழை– எளிய, அடக்கப்பட்ட மக்களின் சமூகப்–பொருளாதார–அரசியல் மீட்டுருவாக்கத்தில் ஆழ்ந்த நம்பிக்கையும், பெரிய எதிர்பார்ப்பும் கொண்டவர்கள்; அதற்காக உழைப்பவர்கள். இவர்களுக்கும், என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தவிர **பேராசியர்கள் ந. பூமிநாதன், ஜி. கேசவரெட்டி, திருமதி. க. கமலா, முனைவர். எல். வேங்கடசாமி** அவர்களுக்கும் என் அன்பார்ந்த நன்றி.

இந்நூலினை வெளிக் கொணர்ந்திடத் துணை நின்ற **புலவர். தி. ரவிச்சந்திரன்** அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றி. இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட **டாமியா கணிணி அச்சகம், சென்னை–2** ஆகியோருக்கும் என் நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைதியான குடும்பச் சூழலைத் தந்து, இந்த 4–வது நூலை மட்டுமல்ல இன்னும் பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிட எனக்கு ஊக்கமளித்து வரும், என் துணைவியாருக்கும், அன்புப் பிள்ளைகளுக்கும், என் சகோதரர்களுக்கும், என்னுடைய அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**"ஊழல், நிழல் பொருளாதாரம், கருப்புப் பணம்"** என்றாலே அரசியலில் மாற்றுக் கட்சியினரை மட்டுமே தாக்கிடப் பயன்படுத்தப்படும் **அரசியல் போர்க்கருவி** என்ற (Political Weapon) நிலையினைக் கொள்ளாமல், இவைகளை, சமூகப் பொருளாதார – அரசியல் பிரச்சினைகளாக, இச் சிறுநூல், நோக்குகிறது. எனவே, எல்லாத் தரப்பு மக்களும் இச்சிறு நூலினைப் பெரிதும் வரவேற்பார்கள் என்றே நம்புகிறேன்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில், இச்சிறு நூலினை, தமிழ் கூறும் நல்லுலகிற்கு மட்டுமல்லாது, எல்லோருக்கும் அறிமுகப்படுத்துகிறேன்.

சென்னை –99 அன்புடன்,

21–02–2000 பி.எஸ். பன்னீர்செல்வம்

SEELAN BOOKS NORWAY SIGNATURE

www.tamilarangam.net

# ஊழலும், ஊழலின் பரிமாணங்களும்

நம் இந்தியத் திருநாடு எங்கணும் தற்போது ஒரு கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. அக்கேள்வி :

**"எது கொடியது? ஊழலா? மதவாதமா?**

என்பதே. இக்கேள்விக்கு மிக எளிதாக விடை கிடைக்கிறது : **"இரண்டும் கொடியவைகள் தாம்"** என்று. ஊழல் எவ்வளவு கொடியதோ, அவ்வளவு கொடியது மதவாதமும் என்பதுதான். ஆனால், இதனைத் தொடர்ந்து அடுத்த கேள்வி எழுப்பப்படும் போதுதான், அதற்கான பதில்கள் வேறுபடுகின்றன; பதில்கள் திசை மாறுகின்றன.

நீதி, நேர்மை, நியாயம், அறம், தர்மம் என்ற விழுமியங்களின் அடிப்படையில் – நன்னெறி மதிப்பீடுகளின் அடிப்படையில் – முதல் கேள்விக்குப் பதில் தந்தவர்கள் கூட, இரண்டாவது கேள்வி எழுப்பப்படும் போது, உறுதியான பதிலைத் தரத் தடுமாறுகிறார்கள், நேரடியான பதில் தரத் தயங்குகிறார்கள். பெரும்பாலும், இரு அணிகளாகப் பிரிகிறார்கள். அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலும், தாங்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளினுடைய எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும், பதில் தருகிறார்கள். அந்த இரண்டாவது கேள்வி:

**"எது மிகவும் கொடியது? ஊழலா? மதவாதமா?**

என்பதே. இந்தியத் துணைக்கண்ட அரசியல்வாதிகளில் மிகப் பெரும்பான்மையோர் இக்கேள்விக்குப் பதில் தரும் விஷயத்தில், இரு அணிகளாகப் பிரிந்து செயல்படுகின்றனர். ஓர் அணியினர், **'ஊழல்தான் மிகக் கொடியது'** என்றும், மாற்று அணியினர், **'ஊழலை விட மதவாதம் தான் மிகக் கொடியது'** என்றும் கூறி, அண்மைக் காலத் தேர்தலில் கூட மிகுந்த சத்தமும், ஆரவாரமும் எழுப்பினர்.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில்: அரசியலே ஒரு நாடகமேடை. அரிதாரம் பூசி, அடவுகட்டி, காலத்திற்கேற்ற வேஷம் பூண்டு, அரசியல் எனும் நாடக மேடையில் நடித்து மக்களைக் கவருவதில் வல்லவர்களே, இன்றையப் பெரும்பாலான அரசியல்வாதிகள். **மென்மையான**

www.tamilarangam.net



**மதவாதம், வன்மையான மதவாதம் –** இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு பெரும்பாலும் யார்தாம் துணைபோகவில்லை? யார்தாம் ஊழலுக்குத் துணைபோகவில்லை?

எனவே, இன்றைய அரசியல் மேடையில், ஆட்கள் மாற வில்லை; வேஷங்கள்தாம் மாறியுள்ளன. பழைய முகங்கள், புதிய வேஷங்கள், புதிய கோஷங்கள். இதுவே இன்றைய பெரும்பாலான அரசியல்.

இருப்பினும், அத்தி பூத்தாற்போல, அல்லி மலர்ந்தாற்போல, கருமேகங்களுக்கிடையே காணப்படும் ஒளிக்கீற்று போல, ஒரு சிலரே **'ஊழலும் மிகக் கொடியது, அதேபோன்று, மதவாதமும் மிகக் கொடியது'** என்று கூறுகின்றனர். இது மிகவும் வரவேற்கத் தக்க முயற்சி, மிகவும் போற்றத்தக்க ஒரு செயல்.

**"ஊழல்"** என்ற சொல்லின் பொருள் யாது? **"ஊழல்"** எனும் சொல்லை, **"ஊழ்+அல்"** எனப்பிரிக்கலாம் இங்கு ஊழ் என்பதற்கு இருவகைப் பொருள் உண்டு. ஒன்று தலைவிதி (Fate); மற்றொன்று, சட்டவரையறைகள் (Law)

**"ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்"** எனச்சிலப்பதிகாரம் கூறும் போது, **"தலைவிதி"** என்ற பொருளில்தான், இளங்கோஅடிகள் ஊழ் எனும் சொல்லைக் கையாள்கிறார். இந்தப் பொருளில் ஊழ் எனும் சொல்லை நாமிங்கு கையாளவில்லை.

மாறாக, **"ஊழ்"** என்றால் விதி முறை என்ற பொருளும் உண்டு என்று சில தமிழ் அறிஞர் கருதுவர். இப்பொருளில்தான் **"ஊழ்"** எனும் சொல்லை நாம் இங்கு கையாள்கிறோம்.

**"ஊழ்+அல்"** என்பதில், **"அல்"** என்பது எதிர்மறை விகுதி. இதற்கு **"அல்ல"** என்ற பொருள் உண்டு. எனவே, **"ஊழல்"** என்பதற்கு விதிமுறைகளுக்கு எதிரான, புறம்பான – என்றும் பொருள் கொள்ளலாம்.

எனவே, தற்போது ஊழல் என்றால் என்ன, அதன் பரிமாணங்கள் யாவை என்பது பற்றி நாம் காண்போம். இன்று, இந்தியச் சமுதாயத்தில் கட்சி பேதங்களுக்கும், வட்டார பேதங்களுக்கும் அப்பாற்பட்டு, **"அங்கு இங்கு எனாதபடி, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும்"** பண்பு என்னவெனில் ஊழலாகும். அரசுத் துறைகளிலும், அரசு சார் துறைகளிலும், அரசு சாராத

www.tamilarangam.net



பிற துறைகளிலும், மறைமுகமாக நிறுவன மயமாக்கப்பட்ட (Institutionalized) ஒன்றாக ஊழல் உள்ளது. நிறுவனங்களில் காணப்படும் ஊழல், மெல்ல மெல்ல வளர்ந்து, படர்ந்து, பரவி, இறுதியில் நிறுவனங்களை முழுமையாக விழுங்கி, நிறுவனங்களையே ஊழலின் மறுபதிப்பாய் மாற்றிவிடுகின்றது.

உலக நாடுகளோடு நம் நாட்டினையும் ஒப்பிடும் போது, ஊழல் மிகவும் மலிந்த முதல் 10 நாடுகளில், இந்தியா 8–வது இடத்தைப் பெற்றுள்ளது என்று **முன்னாள் இந்திக் குடியரசுத் தலைவர் திரு.ஆர். வெங்கட்ராமன்**[1] அவர்கள் தன்னுடைய செய்தியில் கூறுகின்றார். ஆனால், அதே கருத்துப் பட்டறையில், சங்கீதா[2] அவர்களோ, **டிரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் (Transparency International)** என்னும் நிறுவனத்தின் ஆய்வின்படி உலகில் மிகமிக ஊழல் மலிந்த நாடுகளில் 7வது இடத்தை இந்தியா பிடித்துள்ளது என்று கூறுகிறார்.

நாடுகளில் நிலவிடும் இத்தகைய ஊழல், ஜனநாயகத்தின் எய்ட்ஸ் நோய் என்று மைக்கேல் ஜான்ஸ்டன்[3] அவர்கள், தன்னுடைய கட்டுரையில் கூறுகிறார்.

மிகச்சிறிய அளவிலான ஊழல், பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதால், பொருளாதார வளர்ச்சியோடு சார்ந்த பிரச்சினைகளுள் ஒன்றே ஊழல் என போராசிரியர் மைக்கேல் ஜான்ஸ்டன் கூறுகிறார். ஆனால், பேராசிரியர் அகஸ்டின் ருசிண்டானாவோ[4] அரசு நிறுவனங்களோடு ஒன்றிப் போன ஊழலைப் பற்றிப் பின் வருமாறு விளக்குகிறார் :

**"... பொருளாதார வளர்ச்சியோடு இணைந்த ஒரு பிரச்சினை**

[1] R. Venkataraman, Felicitation Message to National Workshop on Corruption at the Grass Roots, Dec. 3-4, 1998, Gandhigram Rural Institute - Deemed University, Dindigul.

[2] Dr. S.N. Sangeetha, 1995, Corruption in Administration : Causes and Consequences.

[3] Michael Johnston, 1997 : What can be done about Entrenched Corruption? Annual World Bank Conference on Devleopment Economics, pp 69-90.

[4] Augustine Ruzindana, 1997 : Comment on What can be done about Entrenched Corruption? Annual World Bank Conference on Development Economics, pp-95-100.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> **மட்டுமன்று, ஊழல் என்பது. அரசு நிர்வாகம் வர்த்தகம், அறம் அறிவியல், பலஹீனமான, மற்றும் முதிர்ச்சி அடையாத சமூகப் பொதுத் தன்மை – ஆகியவைகளோடும் தொடர்பு கொண்ட பிரச்சினையே ஊழல். தனி நபர் லாபம் / குழு லாபம் என்பதோடு மட்டுமின்றி, அதிகாரத்திலுள்ளோர் அதிகார வரம்புகளை மீறாது, மதித்து நடப்பர் என்பதற்காக வரையறுக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களையும், நெறிகளையும், குறிக்கோள்களையும், மீறுதலே ஊழல் ஆகும். அதிகாரம் (Power), அதிகார வரம்பு (Authority) ஆகியவற்றிற்கும் பொது நல, மற்றும் தனி நல / சுய நலச் செயல்பாடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் தாம், ஊழலின் தன்மையினைத் தீர்மானிக்கின்றன..."**

தமக்குள்ள அதிகார வரம்பினை அல்லது அதிகார வரையறையினை, ஓர் அதிகாரி மீறும்போது அச்செயல், அதிகாரத்தினைத் தவறாகப் பயன்படுத்துதலாகும்; அது, அதிகாரத் துஷ்பிரயோகம். சுய நல நோக்கில் அல்லது இலாப நோக்கில் அவர் அவ்வாறு செயல்பட்டாரெனின், அது ஊழல் ஆகிறது. இத்தகைய ஊழலின் வெளிப்புறத் தோற்றம் : பணமும், சொத்துகள் குவித்தலும். இது நேரடி ஊழலாகும். ஓர் அமைச்சர், அல்லது அதிகாரியின் முடிவுரிமையில் (Discretion), சட்டத்திட்டங்கள், சட்ட திட்டப் பாரம்பரிய ஒழுங்குகள் புறக்கணிக்கப்பட்டு, சாதி, இனம், அரசியல் கட்சி சார்பு, மதம், உறவு, போன்றவை குறுக்கிட்டுத் தாக்கம் செய்யுமெனின், இதுவும் ஒரு வகை ஊழலே; அதாவது, மறைமுக ஊழலே.

இத்தகைய நேரடி மற்றும் மறைமுக ஊழலுக்குப் பொருத்தமான ஒரு விளக்கத்தினை அன்றே தந்திருக்கின்றார், **அர்த்த சாஸ்திரம்** எழுதிய **கௌடில்யர்** அவர்கள்.

> **"... நீரில் நீந்தும் மீன் ஒன்று, அத்தண்ணீரை எப்படிக் குடிக்கிறது என்பதை அறிய முடியாதது போலவே, ஒரு குறிப்பிட்ட பொறுப்பில் உள்ள அரசு அலுவலர் ஒருவர், அதற்கான பணத்தைக் கையாடல் செய்வதும்..."**

கிறிஸ்துவர்களின் வேதநூலான **பைபிளிலும்**, கையூட்டு, ஊழல் பற்றியக் குறிப்புக் காணப்படுகிறது:

www.tamilarangam.net



**".... கையூட்டு வாங்காதே, ஏனென்றால், கையூட்டுகள், ஞானிகளையுமே குருடராக்கி, நீதிமான்களின் வார்த்தைகளையும் புரளச் செய்யும்..." —யாத் : 23 : 8**

எனவே/ கையூட்டு, இலஞ்சம், ஊழல் – என்பதெல்லாம் காலங்காலமாக இருந்துவரும் ஒன்று. அரசு அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் இது நடப்பதில்லை. மாறாக, அரசு நிர்வாகத்தோடும், அதன் இயக்கத்தோடும் தொடர்பு கொண்டுள்ள அனைத்து மட்டத்திலும் காணப்படும் ஒன்று. மறைமுகமாகவோ, நேரடியாகவோ இத்தகைய ஊழல் நடைபெறலாம்.

தங்களின் நேரடி, மற்றும் மறைமுக ஊழலைப் பொது மக்களின் பார்வையிலிருந்து மறைத்திட, வறுமை ஒழிப்பு, வேலையில்லாத் திண்டாட்டம் போக்குதல், பொருளாதார வளர்ச்சியினை உயர்த்துதல்— போன்ற உண்மையான சமூகப் பிரச்சினைகளை மக்களின் முன் அலசி ஆராய்ந்து அவர்களிடம் கொண்டு செல்லாமல், இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை காணாமல், மக்களைத் திசை திருப்பிவிட ஊழல் அரசியல்வாதிகள் முயல்வர். மேலும் மக்களின் மலிவான அரசியல் உணர்வுகளுக்குத் தீனிபோட்டு, சமயப்பிணக்குகள், வகுப்பு வெறி, மதவெறி, மொழிவெறி, வட்டார வெறி போன்றவற்றை இந்த அரசியல்வாதிகள் மிகையாகத் தூண்டிவிடுவர். இதன் வாயிலாக, சமுதாயத்தையே வெவ்வேறு கூறுகளாக இந்த அரசியல் வாதிகள் பிளந்து, பல்வேறு வகுப்பினரிடையே வெறுப்புணர்வையும், பகைமை உணர்வினையும், பழி வாங்கும் உணர்வினையும், இவர்கள் தூண்டி விடுவார்கள். தங்களுக்குத் துணையாக, மதம், சாதி போன்றவற்றையும், அவைகளின் தலைவர்களையும் அழைத்துக் கொள்வர். தவிர அரசியல்வாதிகளில் ஒரு சிலர், தங்களின் அரசியல் எதிரிகள் தாம், ஊழலின் முழுமுதற்காரணம் என்றும் சித்தரித்திடவும் முனைவர். இது எதற்காக?

இவைகளைப் போன்ற அரசியல் தந்திரங்களில் கைதேர்ந்தவர், அடால்ஃப்ஹிட்லர் ஆவார். யூதர்களுக்கு எதிரான இன வெறியை, ஜெர்மானிய மக்களிடம் தூண்டிவிட்டு, அந்த வெறுப்பினையும், அதன் வாயிலாக யூதர்கள் இனத்தின் மீது தீயாய்க் கொழுந்துவிட்டு எரிந்த பகைமை உணர்வு மற்றும் பழிவாங்கும் உணர்வின் அடிப்படையிலும், தன்னுடைய நாஜிக் கட்சிக்கு உரமிட்டு வளர்த்து, ஆட்சியைப் பிடித்தவர் அடால்ஃப்

www.tamilarangam.net



ஹிட்லர் ஆவார். அவர்[5] கூறுகிறார் :

**"... ஒரு நாட்டின் பெரும்பாலான மக்கள், பேராசிரியர்களோ, அயல்நாட்டுத் தூதுவர்களோ அல்லர். உயர்நிலைக் கருத்துக்களோடு, பெரும்பாலான மக்களுக்கு மிகக் குறைந்த தொடர்பே இருப்பதால், அவர்களின் நடவடிக்கைகளும், எதிர் நடவடிக்கைகளும், அவர்களின் உணர்ச்சிகளையே சார்ந்துள்ளன. உணர்ச்சி பூர்வமான அவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளுமே, அவர்களுக்கு நீடித்த, உறுதியான நிலைப் பாட்டினைத் தருகின்றன. மத நம்பிக்கையினை எதிர்த்து வெற்றிகரமாகப் போராட இயலாது, ஆனால், அறிவினை எதிர்த்து வெற்றிகரமாகப் போராட இயலும். ஒருவர் மீது கொண்டுள்ள நேசம் பெரும்பாலும் மாறாது. ஆனால் ஒருவர் மீது கொண்டுள்ள மதிப்பு மாறிவிடும். அருவருப்பு என்பதை விட, வெறுப்பே என்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியது. உலகின் மாபெரும் புரட்சிகளை உருவாக்கி வழிநடத்திடும் ஊக்க சக்தியாக இருந்திருப்பது, பெரும்பாலான பொது மக்களைக் கவர்ந்த விஞ்ஞானம் சார்ந்த அறிவல்ல, மாறாக, பெரும்பாலான மக்களை ஆட்கொண்ட நம்பிக்கைகளும், ஒருவகையான உணர்ச்சிபூர்வம் கொண்ட மனநிலைகளைப் பெரும்பாலான மக்களிடையே தோற்றுவித்து, அவர்களைச் செயல்பட வைக்கும் மனக்கிளர்ச்சியுமே ஆகும்..."**

ஹிட்லரின் இந்தக் கூற்றினின்றும், மற்றொரு உண்மையும் நமக்குத் தெளிவாகும். **'விலங்குகளோடு ஒப்பிடுங்காலை, மனிதனே பகுத்தறிவு (Rational) மிக்கவன்'** என்ற கூற்றினை, நாம் எல்லோரும் கூறிக் கொண்டிருக்கிறோம். அடிப்படையில், இக்கூற்று, மிகவும் தவறான ஒன்று என உளவியலார் கூறுவர். மாறாக **'விலங்குகளோடு ஒப்பிடுங்காலை, மனிதனே மிகவும் பகுத்தறிவு அற்றவன்'** (Irrational) என்ற கூற்றும் மிகவும் பொருத்த முடையதே. ஏனெனில் மனிதனை, மனிதக் கூட்டத்தின் பெரும் பகுதியினரை, அறிவு சார்ந்த விழுமியங்களும் மதிப்பீடுகளும், ஆளுமை செய்வது, பெரும்பாலும் மிகக் குறைவே. மாறாக, நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புகளும், உணர்ச்சி பூர்வமான எண்ணங்களும், உணர்வுகளுமே சாராசரி மனிதனைப் பெரும்பாலும் ஆட்சி செய்கின்றன. இந்த நம்பிக்கைகளையும்,

[5] Adolf Hitler, 1939. Mein Kampf, p. 283:

www.tamilarangam.net



உணர்வுகளையும் உருவாக்க வல்லவை, பிரச்சாரங்களும் விளம்பரங்களுமே (Propaganda), மனிதனின் மனத்தில் நேரடியான தாக்கம் செய்திடும் சொற்பொழிவுகளும் விளம்பரங்களும் (Direct Propaganda). மறைமுகமாக ஆனால், மிகவும் ஆழமாகவும், உறுதியாகவும், மனிதனின் மனத்தை மாற்றும் பேச்சுக்களும் விளம்பரங்களும் (Indirect or Sublimal Propaganda), மனிதன் எவ்வாறெல்லாம் பகுத்தறிவு இல்லாதவன் என்பதையே சுட்டிக்காட்டுகின்றன.

தவிர, சராசரி மனித மனத்திற்கு, அதன் சமநிலைக்கு (Equilibrium), உண்மையும் தேவை; பொய்யும் தேவை. கற்பனையும், கனவுகளும், நவீனங்களும், தொன்மங்களும் (Myths), அறிவும், அறியாமையும், நம்பிக்கையும், மூட நம்பிக்கையும், ஆழ்மனப் பொய்மைகளும் (Delusions) ஒரு சேரத் தேவை. இவைகளின் அடிப்படையில்தான், எல்லா சமயங்களும், மதங்களும் கட்டப்படுகின்றன. **மனிதனின் செயலுக்கு அடிப்படை நம்பிக்கை; எதிர்பார்ப்புடன் கூடிய நம்பிக்கை; நம்பிக்கையின் அடிப்படை: மனிதனின் கற்பனை; கற்பனைக்கு அடிப்படை, மனிதனின் கனவு. பெரும் மக்கள் கூட்டம் ஒன்றினைக் கனவு காண வைப்பது, கற்பனை (Imagination) செய்ய வைப்பது, விளம்பரமும், தகவல் பரப்புதலும் பேச்சாற்றலும் ஆகும்.**

எனவே, ஊழல் மலிந்த ஒரு நாட்டில்தான், உணர்ச்சிபூர்வமான கோஷங்களும், பொய்மைக் கோட்பாடுகளும், அந்நாட்டு அரசியல் வாதிகளாலும், ஆளுமை வர்க்கத்தினராலும், பொதுமக்கள் முன் வைக்கப்படுகின்றன. அரசு அதிகாரிகள், மற்றும் அமைச்சர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், ஊழல்நாயகர்களாக (Kleptocrats) மாறிவிட்டபோதிலும், ஜனநாயகமே ஊழல்நாயகமாக (Kleptocracy) மாறிடும்போதும், அவைகளை மறைப்பதற்காக, கவர்ச்சித் திட்டங்களும், உணர்ச்சிக் கோஷங்களும், மக்களின் முன் வைக்கப்படுகின்றன. இந்நிலை நீடிக்குமாயின், இறுதியில், நாட்டின் பொருளாதார அமைப்பையே, இந்த ஊழல் எனும் எய்ட்ஸ் நோய், சீர்குலைத்து விடும்.

ஊழல் தலைவிரித்தாடும் ஒரு நாட்டில், ஊழலோடு கூட மேலும் இரு வகையான சமூகக் கட்டமைப்புகள் ஒரு சேர உருவாகி, ஒன்றிற்கொன்று துணைபுரிந்து, வலிமை பெற்றோங்குவதை நாம் காணலாம்.

(i) நிழல் பொருளாதாரம் (Shadow Economy)

(ii) மிகை வாரப் பொருளாதாரம் (Rent-Seeking Economy)

www.tamilarangam.net



வரி ஏய்ப்போடும், ஒளிவு மறைவோடு சொத்துக்களையும், தாம் பெற்றிடும் வருமானங்களையும் ஒருவர் அறிவிக்கை செய்தலும், நிழல் பொருளாதாரத்தோடு, தொடர்பு கொண்ட பிரச்சினைகள். அதேபோன்று, முதலீட்டிற்கான வட்டி (Interest), மற்றும் தொழில் முயல்வோர் (Entrepreneurs) பெற்றிடும் இலாபம் (Profit) - இவைகள் இரண்டும் ஒருங்கிணைந்த வார–வீதங்கள் (Rental Rates) தொடர்பான பிரச்சினைகளே மிகைவாரப் பொருளாதாரப் பிரச்சினைகள்.

அவ்வாறாயின் மிகைவாரப் பொருளாதாரம் (Rent-Seeking Economy) என்றால் என்ன? அதன்பங்கு என்ன? இக்கேள்விகளுக்கு விடை காணவேண்டுமாயின், மிகை வாரங்கள் (Rental Rates) என்றால் என்பதை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

மிகை வாரம் என்ற சொல்லே, வாரம் (Rent) என்ற சொல்லினின்றும் பிறந்த ஒன்றாகும். இச்சொல், பொருளாதார அறிவியலைச் சார்ந்த ஒரு சொல். முதலில் நிலத்திற்கு மட்டும் கொடுக்கப்படும் வாடகைத்தொகை, வாரம் (Rent) என்று அழைக்கப்பட்டது. இதற்கு மாற்றாக, குத்தகை என்ற சொல்லும் வழக்கில் உண்டு. எனவே, வாரம் என்பது, பொருளியல் கலைச்சொல்லாகும்.

பொதுவாக, ஒரு பொருளை அல்லது பணியினை (Services) உற்பத்திச் செய்வதில் பங்கேற்கும் மற்ற பொருள்களை, உற்பத்திக் காரணிகள் (Factors of Production) என்றும், அவைகள் நான்கு வகைப்படும் என்றும் பொருளாதார அறிவியலில் கூறுவர். இவை: நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital), மற்றும் தொழில் முயற்சி (Organization). இவைகள் உற்பத்தியில் பங்குபெறும் போது, இவைகள் பெறும் வாடகை–ஊதியங்களாவன முறையே, வாரம் (Rent), கூலி (Wage), வட்டி (Interest) மற்றும் இலாபம் (Profit) ஆகும்.

ஆனால், தற்போதோ, ஒரு பொருளின் அல்லது உற்பத்திக் காரணியின் பற்றாக்குறைக்கேற்ப (Shortage), கிடைப்பருமைக்கேற்ப (Scarcity), அதன் வாடகை பல மடங்கு உயர்ந்து விடுகின்றது. இதனையே மிகைவாரம் (Rental Rate) எனலாம். சான்றாக, நெருக்கடியான நேரத்திலும், திடீர் வேலை நிறுத்தக் காலங்களிலும் போக்குவரத்து வண்டிகள் டாக்சி, ஆட்டோ போன்றவைகளின்–வாடகை மிக அதிகமாக உயர்த்தப்படும். இது மிகைவாரத்திற்கு நல்லதொரு எடுத்துக்காட்டாகும். இவ்வாறு மிகைவாரம் என்பது எல்லா உற்பத்திக் காரணிகளையும் சார்ந்த ஒன்றாக உள்ளது.

www.tamilarangam.net


சான்றாக, ஒரு ஏக்கர் நிலம் உள்ளது எனின்; அந்நிலத்திற்கு அருகாமையில், புதிதாக ஒரு இரயில் நிலையமோ, தொழிற்சாலையோ அமைக்கப்பட்டால், அந்த நிலத்தின் வாடகை பன்மடங்கு உயரும். தொழில் நுட்ப அடிப்படையில் அந்த நிலத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டால், அந்நிலத்தின் மதிப்பு பன்மடங்கு உயரும். இங்கு மிகை வாரம் தோன்றியுள்ளது. ஏனெனில், நிலம் (Land) என்ற நிலையிலிருந்து அது மூலதனம் (Capital) ஆக மாறியுள்ளது. தனியார் கையிலுள்ள பூங்காக்கள், விளையாட்டுத்தளங்கள், கருத்தமைவுப் பூங்காக்கள், திரைப்பட ஸ்டுடியோக்கள்–இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும்.

அதே போன்று, ஒருவர் தொழில்நுட்ப வல்லுநராக (Expert) மாறி, அவருடைய திறமை (Efficiency) நாடெங்கும் போற்றப்படும் அரிய பொருளாக மாறிடின், அவர் கிடைத்தற்கரிய (Scarce) பொருளாக மாறுகிறார். இதன் விளைவாக, அவருடைய ஊதியம் பல மடங்கு உயர்ந்து, பல ஆயிரம் ரூபாய்கள் என மாறிடும் எனின், இந்த ஊதியத்தின் பெரும் பகுதி மிகைவாரம் ஆகிறது. இவரைப் போன்றவர்களே, மிகவும் அரிய திறமை கொண்ட பொறியாளர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பெரும் பெரும் வணிகர்கள், தரகர்கள், பங்குச் சந்தை, அந்நியச் செலாவணித் தரகர்கள், சினிமா நடிகர்கள், நுண்கலை வித்தகர்கள் (Experts), விளையாட்டு வீரர்கள், தொழில் சிறப்புத்திறன் பெற்றவர்கள் (Specialists), மதப் பிரசங்கிகள், மத போதகர்கள், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் ஆகியவர்கள். ஏனெனில் இவர்களின் தனித்திறமை, உழைப்பு என்பதைவிட, அரிய மூலதனமாக (Capital), தனிநபர் மூலதனமாக மாறிவிடுகின்றது. இவர்கள் அனைவரும் நாட்டின் சொத்துக்கள். நாட்டிற்குப் பெருமை சேர்ப்பவர்கள். இவர்கள், நாட்டின் மூலதனமாக மாறிவிடுகிறார்கள்.

அடுத்து வருவது, உற்பத்திக் காரணியான மூலதனம் (Capital), பொதுவாக, முதலீட்டினையும் (Investment) அதற்கானத் தொகையினையும், மனிதனால் உருவாக்கப்பட்டு, ஆனால் பிற பொருள்களையும், பணிகளையும் உற்பத்தி செய்வதில் பங்கேற்கும் அனைத்துக் காரணிகளையுமே, மூலதனம் என்று குறிப்பிடுவர். சான்றாக, முதலீட்டுத் தொகை, கருவிகள், கட்டிடங்கள், அறைகலன்கள் (Furniture), உற்பத்தித் தளவாடங்கள், இயந்திரங்கள், போன்றவை அனைத்தும் மூலதனம் ஆகும். நெருக்கடியான காலங்களிலும், யுத்த காலங்களிலும், சான்றாக, யுத்தக் கப்பல்களின் வாடகை பன்மடங்கு உயரும். அப்போது, இந்த வாடகை உண்மையான நிலவாரம் (Quasi-Rent)

www.tamilarangam.net



போலத் தோற்றமளித்தாலும், இவைகள் நிலவாரம் இல்லை; மாறாக, இவைகள் இந்த மூலதனங்களின் மிகைவட்டியாகும் (Interest); இதில் இலாபமும் கலந்துள்ளது. இவைகள் பெறும் இயல்பான வட்டியினைவிட, மிக மிக அதிகமான வட்டியினை. கிடைப்பருமைக் காலங்களில், இந்த மூலதனங்கள் பெறுகின்றன. ஆகவே, இவைகள் மிகை வாரங்களே (Rental Rates).

இறுதியாக நாம் காண்பது, தொழில் முயல்வோர் (Entrepreneurs) அல்லது தொழில் முயற்சி மேற்கொள்ளுவோர் பற்றியது. சாதாரணமாக, இவர்களைத் தொழிலதிபர்கள் (Captains of Industry) என்று கூறுவர். இவர்கள் தங்களின் உழைப்பிற்காகப் பெறுவது இலாபம் (Profit) எனப்படும். பொருளியலில், இந்த இலாபத்தினை இருவகையாகப் பிரிப்பர். ஒன்று இயல்பு இலாபம் (Normal Profit); மற்றொன்று, மிகை இலாபம் (Abnormal Profit). இதனையேச் சர்வாதீன அல்லது, முற்றுரிமை இலாபம் (Monopoly Profit) என்றும் கூறுவர். தங்களுடைய தொழில்கள் சர்வாதீனங்களாக மாறும்போது இந்த முற்றுரிமை இலாபம் விளைகிறது.

ஆனால், இவர்களில் கணிசமான அளவினர் மிக மிகத் திறன் கொண்டவர்களாக இருந்து, இவர்களின் தொழில்கள் பெருகத் தொடங்கினால், இதனால் விளைந்திடும் இலாபம், பன்மடங்கு அதிகமாக இருக்கும். முற்றுரிமை இலாபம் என்ற நிலை போய், மிகை வாரம் (Rental Rate) என்ற நிலையினை, இந்த இலாபம் அடையும். இந்த மிகை வாரம் பெருகப் பெருக, தனிநபர்கள் அல்லது அவர்களின் குடும்பங்கள், பொருளாதார இராஜ்ஜியங்களாக (Economic Empires)-அந்த இராஜ்ஜியங்களை ஆளுமை செய்திடும் பொருளாதாரச் சக்கரவர்த்திகளாக (Economic Emperors) இவர்கள் மாறிவிடுவர்.

சான்றாக, இத்தகைய செல்வந்தர்களில், உலகளாவிய செல்வந்தர்கள் பற்றி நாம் தற்போது காணலாம். இத்தகைய செல்வந்தர்களை, எல்லையிலாச் செல்வந்தர்கள் (Ultra Rich) என, ஐக்கிய நாடுகள் சபையின் (United Nations), 1998-ஆம் ஆண்டிற்கான மனித வள முன்னேற்ற அறிக்கை (Human Development Report, 1998) குறிப்பிடுகின்றது. உலகிலேயே உச்சிநிலை அல்லது எல்லையிலாச் செல்வந்தர்கள் (Ultra-Rich) என்று, அந்த ஐ.நா. அறிக்கை, 225 பேரைத் தெரிவு செய்துள்ளது. அந்த அறிக்கையின் பிற புள்ளி விவரங்களைப் பின்வருமாறு நாம் விளக்கலாம்:

★ உலகின் உச்சிநிலைச் செல்வந்தர்களான இந்த 225 பேரின்

www.tamilarangam.net



இன்றைய (1998) சொத்தின் மொத்த மதிப்பு, சுமார் ஒரு டிரில்லியன் டிரில்லியன் டாலர்களைவிட அதிகமாகும். அதாவது, இவர்களின் சொத்துக்களின் கூட்டுத்தொகை, (1 மில்லியன் x 1 மில்லியன்)³ டாலர்களை விட அதிகமாகும்.

★ உலகின் இன்றைய (1998) மக்கள் தொகை, ஏறத்தாழ 600 கோடி. இதில் மிகவும் ஏழைகள் (Very Poor) என்போர், சுமார் 40% அல்லது 240 கோடி மக்களாவர். இதில் 47% மக்கள் தொகை என்பது, ஏறத்தாழ 113 கோடி மக்களாவர். உலகின் இந்த 113 கோடி மக்கள், ஓர் ஆண்டில் பெறும் வருமானத்தின் மொத்தத் தொகை, அந்த 225 பேர்களுடைய மொத்த சொத்திற்குச் சமம்.

அந்த ஆய்வறிக்கை மேலும் கூறுகிறது :

★ இன்றைய அளவில், ஆரம்பக் கல்வி (Primary Education) பெறாத உலக மக்கள் அனைவருக்கும், அடிப்படைக் கல்வியினைத் தந்திட, மொத்தம் 40 பில்லியன் டாலர்கள் ($40,000 கோடி) ஓர் ஆண்டில் செலவாகும்.

★ இந்த 225 உச்சி நிலைச் செல்வந்தார்களின் மொத்த சொத்தில், இத்தொகை ($40,000 கோடி), சுமார் 4%க்கும் குறைவாக உள்ளது.

★ இந்த உச்சி நிலைச் செல்வந்தர்கள் 225 பேரில், 147 பேர், தொழில் மயம் பெற்று, முன்னேறிய மேலை நாடுகளைச் சார்ந்தவர்கள். சான்றாக இதில் அமெரிக்காவினைச் சார்ந்தவர்கள் 60 பேர். இவர்களின் சொத்தின் மொத்த மதிப்பு 311 பில்லியன் ($311000 கோடி) டாலர்களாகும். அதேபோன்று, இந்த 225 பேரில், ஜெர்மனியைச் சார்ந்தவர்கள், 21 பேர். இவர்களுடைய சொத்துக்களின் மொத்த மதிப்பு, 111 மில்லியன் ($111000 கோடி)

இவர்கள் 225 பேரும் பெறுவது, இயல்பு இலாபம் (Normal) என்றோ, சர்வாதீன இலாபம் (Monopoly Profit) என்றோ நாம் குறிப்பிட முடியாது. அளவிட முடியாத மிகை வாரத்தினை இவர்கள் பெறுகிறார்கள்.

இந்த உச்சிநிலைச் செல்வந்தர்கள், தங்களின் நிலைபற்றி, மக்களின் முன் வைக்கும் விவாதங்கள் குறித்தும், ஐ.நா. சபையின் அந்த ஆய்வறிக்கை மேலும் விவாதிக்கிறது. போட்டி போட்டுக் கொண்டு இந்த செல்வந்தர்கள் செலவழிக்கிறார்கள் (Competitive Spending). தவிர, அளவுக்கதிகமாகப்

www.tamilarangam.net



பகட்டு நுகர்வில் (Conspicuous Consumption) இந்தச் செல்வந்தர்கள் ஈடுபடுகிறார்கள். இதைப்பற்றி, இவர்களைப் போன்ற செல்வந்தர்கள் கூறுவதெல்லாம் :

★ **'நாங்கள் சம்பாதித்ததை, நாங்கள் செலவு செய்கிறோம் கடுமையான, நேர்மையான உழைப்பாலும், எங்களின் தனித் திறமையாலும், இந்தச் சொத்துக்களைச் சம்பாதித்துள்ளோம்; எனவே, எங்களின் இஷ்டத்திற்கு, எங்களுக்குப் பிடித்த வகையில், நாங்கள் செலவிடுவோம்.'**

என்பதுதான். இத்தகைய விவாதங்களுக்கும், நல்லதொரு பதிலை, ஐ.நா. சபையின் அந்த ஆய்வறிக்கை தருகிறது.

இந்த ஆய்வறிக்கை, மக்கள் முன் வைக்கும் விவாதம் என்னவெனின்:

★ **'பெருஞ் செல்வந்தர்களின் செல்வத்தினால் விளையும் பகட்டு நுகர்வும், போட்டி போட்டுக் கொண்டு செலவழித்தலும், பலரின் சமூக விலக்கலுக்கு (Social Exclusion) காரணமாக அமைகிறது.'**

தீவிர ஆராய்ச்சிக்குப் பின், அதன் அடிப்படையில், இந்த ஆய்வறிக்கை மேலும் கூறுகிறது :

★ **'... இந்தப் பகட்டு நுகர்விற்கான சுமைகளையும், விலைகளையும், ஏழை நாடுகளும், ஏழை மக்களுமே தம் தோளில் சுமக்கின்றனர்...'**

ஏனெனில், இந்தச் செல்வந்தர்களின் சொத்துக்களின் மிகப்பெரும் பகுதி, மிகைவாரம். உலகெங்கிலும் உள்ள நுகர்வோர்கள்—ஏழைகள், நடுத்தர வகுப்பினர், மேல்மட்ட வகுப்பினர், இந்தச் செல்வந்தர்களின் நிறுவனங்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை, அதிக விலை கொடுத்து வாங்குகின்றனர். இந்த விலையே, மிகை இலாபம்; மிகை வாரம் உற்பத்தியாகும் மூல ஆதாரமே இந்த மிகை லாபம். பொருள்களின் விலைகள் மட்டுமல்ல; தனியாரின் மருத்துவப் பணிகள், கல்விப் பணிகள், கலைப்பணிகள், தரகுப் பணிகள், இடையீட்டுப் பணிகள் (Middlemen Services) போன்ற பணிகளுக்கும் இதுபொருந்தும். மக்களின் சேமிப்புகளும் (Savings), மற்றும் ஒவ்வொரு—வரிடமிருந்து, நேரடியாகவோ, மறைமுகமாகவோ, மக்கள் விரும்பியோ (Voluntary), கட்டாயமாகவோ (Enforced), அவர்களிடமிருந்து பெறப்படும்

www.tamilarangam.net



கட்டணங்கள் (Charges, Fees),செலுத்துகைகளும், ஒரு சிலரிடத்தில் குவிந்து, மிகைவாரமாகப் பரிணாம வளர்ச்சி அடைகின்றன. எனவே, எங்கள் முயற்சியினால்தான் நாங்கள் பெருஞ் செல்வந்தர்களாக, பெருந் தொழிலதிபர்களாக, பெரும் சுயநிதிக் கல்வி நிலைய நிறுவனர்களாக, பெரிய வணிகர்களாக, தரகர்களாக, பெரும் நடிகர்களாக, பெரும் விற்பன்னர்களாக மாறினோம் என்று செல்வந்தர்கள் கூறினால், அது கால்பங்கு உண்மையே. மீதி முக்கால் பங்கு, சமுதாயத்தினை சேர்ந்ததாகும். அதாவது, சமுதாயம் தான் இவர்களைச் செல்வந்தர்களாக்கியுள்ளது.

ஏனெனில், ஒவ்வொரு சமயத்திலும், எண்ணிலடங்காத தொழில் முனைப்பு வாய்ப்புகளை (Investment Opportunities), சமுதாயம் தோற்றுவித்துக் கொண்டே உள்ளது. அவ்வாய்ப்புக்களை அடையாளம் கண்டு (Identifying Investment Opportunities), அவைகளைக் கைப்பற்றி, சிறு சிறு சேமிப்பு வைப்புகளால் பெருகியுள்ள வங்கிகளின் இருப்பிலிருந்து கடன் நிதி பெற்று, தம் தொழிலை ஒரு தொழில் முயல்வோர் தொடங்குகிறார். அவர் தொழில் நடைபெற, சமூகச்–சட்டபூர்வமான பாதுகாப்பினை (Security), அரசாங்கம் தருகிறது. தவிர, அமைதியான தொழில் சூழலையும் (Industrial Climate) அரசாங்கம் அமைத்துத் தருகின்றது. தொழில் முயல்வோர்களும், தங்களுடைய பொருள்களையும், பணிகளையும் பொதுமக்களிடையே இலாபம் அல்லது மிகை இலாபத்தில் விற்று, பெருஞ் செல்வந்தராகின்றனர். இத்தகையோரின் செல்வத்தில் பெரும் பகுதி, மிகைவாரமாக உள்ளது. எனவே, எங்களின் உழைப்பும், மூளையுமே எங்களை இந்த அளவிற்கு உயர்த்தின; சமுதாயத்தின் பங்கு இதில் ஒன்றுமே இல்லை என்று தொழில் அதிபர்கள், பெரும் செல்வந்தர்கள், சுயநிதிக் கல்வி நிலைய நிறுவனர்கள்,பெரும் சினிமா நடிகர்கள், மதபோதகர்கள், பிரசங்கிகள் தொழில் வல்லுநர்கள்–போன்றோர் கூறுவது, பொருந்தாத ஒன்றாகும். ஏனெனில், இவர்களின் சொத்துக்களின் பெரும்பகுதி மிகைவாரம் ஆகும். இந்த மிகைவாரம் சமுதாயத்தின் உபரி (Social Surplus) யாகவும் உள்ளது.

இதனை ஒரு சான்றுடன் நாம் விளக்கலாம். அண்மையில், அஸ்ஸோசாம் (Assocham : Associated of Chambers of Commerce and Industry), சி.ஐ.ஐ. அல்லது இந்தியத் தொழிலதிபர்களின் கூட்டமைப்பு (CII: Confederation of Indian Industry) மற்றும் அகில இந்திய வங்கி அலுவலர்களின் சங்கம் (All India Bank Employees Association)

www.tamilarangam.net



ஆகியவைகளுக்கிடையே பெரும் பிரச்சினை ஒன்று தோன்றியது. இதனைப் பற்றி, **இந்து**[6] நாளேட்டில் வந்த செய்திக் குறிப்பினை நாம் தற்போது, சுருங்கக் காணலாம்.

இந்தியப் பொருளாதாரத்தில், கடந்த 1980-ஆண்டு முதலே, பொருளாதாரத் தாராளமயக் (Economic Liberalism) கொள்கைகள் மெல்ல மெல்லக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், கடந்த **1991–ம்** ஆண்டில்தான், புதிய பொருளாதாரக் கொள்கை (New Economic Policy) எனும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் (Economic Reforms), முழுவீச்சில் மத்திய அரசின் கொள்கையாக அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சீர்திருத்தங்களின் அடிப்படையான அணுகுமுறையே, நாட்டின் பொருளாதார அமைப்பின் உள்கட்டுமானங்களின் சீர்திருத்தங்கள் (Structural Reforms) எனப்படும் பேரினப் பொருளாதாரத் சீர்திருத்தங்கள் (Macro-Economic Reforms) ஆகும்.

மத்தியில் உள்ள 243 அரசுத் துறைகளையும் (Public Sector), அரசின் பொருளாதாரப் பணிகளையும், பாய் சுருட்டுவதைப்போலச் சுருட்டி, மூலையில் வைத்துவிட்டு, அந்த இடத்தில், தனியார் துறைகளையும், பணிகளையும் புகுத்தி, அவைகளின் வளர்ச்சியினை ஊக்குவித்திடல் வேண்டும் என்பதே, இப்புதிய பொருளாதாரக்கொள்கையின் சில அம்சங்களாகும். தற்போது நாம் **1999–ல்,** இரண்டாம் தலைமுறைச் சீர்திருத்தங்கள் (Second Generation Reforms) காலத்தில் இருக்கிறோம்.

**சி.ஐ.ஐ. எனப்படும் இந்தியத் தொழில்களின் கூட்டமைப்பு மற்றும் அஸ்ஸோச்சாம் எனப்படும் (Assocham : Associated Chambers of Commerce and Industry, India) இந்திய வணிகம், மற்றும் தொழில்கள் மன்றக் கூட்டமைப்பு**-போன்றவைகள் இப்புதிய பொருளாதாரக் கொள்கையினைப் பெரிதும் வரவேற்கின்றன.

மிகவும் வலிமையான பன்னாட்டுப் பொருளாதார நிறுவனங்கள், (Multi-National Corporations) உலகளாவிய அளவில், **500** உள்ளன என்று ஃபார்ச்சூன் (Fortune) என்ற அமெரிக்கப் பத்திரிகை கணக்கெடுத்துள்ளது. அதில் அடங்கும் இந்திய நிறுவனங்கள் தற்போது **2** ஆகும். அந்த

[6] The Hindu : Assocham takes a snipe at CII, Supports Banks : Dec. 21, 1999 P. 10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எண்ணிக்கை 100 ஆக உயர்ந்திட வேண்டும் என்பது, சி.ஐ.ஐ–யின் வேட்கை; அதேபோன்று, அரசுத் துறைகள் அறவே ஒழிக்கப்பட வேண்டும், என்பதும் இதன் கொள்கை. பாதுகாப்புத்துறை உள்பட அனைத்துத் துறைகளுமே, தனியாரிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்; அரசுத் துறைகளில், பணியிடங்கள் காலியாகும் போது, அவ்விடங்களில் புதிதாக யாரையும் நியமிக்கக்கூடாது; அதே போன்று, எந்த ஒரு புதிய வேலைவாய்ப்பினையும், அரசுத்துறைகளில், இனிமேல் உருவாக்கக்கூடாது–என்பவைகளே, அஸ்ஸோசாமின் கொள்கைகளாகும். அஸ்ஸோசாமின் அன்றைய தலைவர் ஏ. மஜூம்தார்[7] கூறுகிறார்:

★ **"... தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளிலிருந்து, அறவே அரசு போய்விட வேண்டும் என்று நாம் நம்புகிறோம். இவைகள் அனைத்தும், இந்திய மக்களுக்கே விட்டுவிடவேண்டும். பாதுகாப்புத் துறையின் தளவாடங்கள், கருவிகள் அனைத்தின் உற்பத்தியும், மெல்ல மெல்லத் தனியார் துறைக்கே மாற்றப்பட வேண்டும்..."**

★ **"... அரசின் செலவினங்களைக் குறைத்திட, எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். அரசின் துறைகளில் காலியாகும் இடங்களை நிரப்புவதோ புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோ, முற்றிலுமாகக் கூடாது... அடுத்த 10 ஆண்டுகளில், அரசாங்கம், தன்னுடைய அலுவலர்களின் எண்ணிக்கையினைக் கடுமையாகக் குறைக்க வேண்டும்..."**

இந்த அஸ்ஸோசாம், சி.ஐ.ஐ. மற்றும் அகில இந்திய வங்கித் தொழிலாளர்களின் சங்கம்–இவைகளுக்கிடையே நடந்த மோதல் பற்றித்தான், 'இந்து' நாளேடு கூறுகிறது.

★ நாட்டுடமையாக்கப்பட்டுள்ள வங்கிகளில், 3 பெரும் வங்கிகள் பெரும் நஷ்டத்தில், இயங்கிக் கொண்டுள்ளன. இவைகளைப்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்திட, இந்தியத் தொழிற் கடன்நிதி மற்றும் முதலீட்டுக் கழகத்தின் **(Industrial Credit and Investment Corporaton of India)** மேலாண்மை இயக்குநர் **கே.வி. காமத் (K.V. Kamath)** தலைமையில், **விரைவுச் செயற்பாட்டுக்குழு (Task Force)** ஒன்றினை, சி.ஐ.ஐ. நியமித்தது.

[7]A. Mazumdar, 1991, A New Economic Order... Our National Priority, P. 26

www.tamilarangam.net



★ இந்த விரைவுச் செயற்பாட்டுக்குழு, அரசாங்கத்தாலோ, இந்திய ரிசர்வ் வங்கியாலோ (Reserve Bank of India) நியமிக்கப் படவில்லை. இருப்பினும், தன் அறிக்கையினை இக்குழு அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தது.

★ இந்த அறிக்கையின் தலையாய பரிந்துரையே, **"பலவீனமான இந்த 3 பொதுத்துறை வங்கிகளையும் இழுத்து மூடிவிட வேண்டும்"** என்பதுதான்.

★ உடனேயே சிலிர்த்தெழுந்தன, **இந்தியன் வங்கி அலுவலர்கள் சங்கங்களும் (Indian Bank Employees Unions)** மற்றும், **அகில இந்திய வங்கி அலுவலர்கள் கூட்டமைப்பும் (All India Bank Employees Association)**.

இந்த வங்கிச் சங்கங்களின் அறிக்கையின்படி :

★ "பொதுத்துறை வங்கிகளில் ஒரு சில பலவீனமானதற்குக் காரணமே , எல்லா பொதுத்துறை வங்கிகளும் இதுகாறும் சுமந்து கொண்டு வந்த **செயல்திறம் இழந்த வங்கிச் சொத்துக்கள் (Non-Performing Assets)** எனப்படும் அடைக்கப்படாத கடன்களாகும்."

★ **"இந்த அடைக்கப்படாத கடன்களில், ஏறத்தாழ ரூ. 50,000 கோடிக்கு மேல், பெரிய பெரிய தொழிலதிபர்கள் வங்கிகளிலிருந்து பெற்று, இதுவரையிலும் அடைக்காத கடன்களாகும்...."**✪

இந்த ரூ. 50,000 கோடியை கடனாகப் பெற்று இதுவரையிலும் திருப்பிச் செலுத்தாத பெரிய பெரிய தொழிலதிபர்களின் பெயரைப் பட்டியலிட்டு பொதுமக்களின் பார்வைக்காக வெளியிடுவோம் என்று, வங்கி அலுவலர்களின் சங்கங்கள் எதிர்த்தாக்குல் நடத்தியவுடன், சி.ஐ.ஐ.–யும் மீறி, அஸ்ஸோசாம், தன் நிலையிலிருந்து பின் வாங்கி, வங்கி அலுவலர்கள் சங்கங்களுக்கு ஆதரவாக மாறியது குறிப்பிடத்தக்கது.

---

✪ ஆனால் இதைப்பற்றிக் கூறும் சி.பி. சந்திரசேகர் (C.P. Chandrasekhar : Of Banks and Big Business, Frontline, pp 97-98) அவர்களின் கட்டுரையில் : வாராக் கடன்கள் மொத்தம் ரூ. 58,000 கோடி எனவும்; அதில் தனியார் துறையினர் பெற்றுள்ளது ரூ. 30,000 கோடி எனவும்; இந்த ரூ. 30,000 கோடியில், இந்தியத் தொழில்களின் கூட்டமைப்பினைச் சார்ந்தவர்கள் மட்டும் பெற்றது ரூ. 25,000 கோடி என்றும், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் கூறுகிறது என்று விளக்கமளிக்கிறார்.

www.tamilarangam.net



இந்நிலையில் அகில இந்திய அனைத்து வங்கி அதிகாரிகள் சங்கங்களின் கூட்டமைப்பின் (Federation of All India Bank Officers Associations) முன்னாள் துணைத்தலைவர் கண்ணன் கி.நா.[8] அவர்கள், தன்னுடைய கடிதக் கட்டுரையில் கூறியுள்ளவற்றை இந்நூலின் வாசகர்களும் அறியவேண்டும். கண்ணன் எழுதுகிறார்:

"... அரசு வங்கிகளில், வாராக் கடன்கள் அதிகரித்துக் கொண்டு போவதாகவும், தனியாரிடம் ஒப்படைத்தால், இத்தகு அவலங்கள் நிகழா என்றும், பல நிலைகளில் உள்ளவர்க்கும் ஒரு தவறான வாதத்தை முன்வைத்து, அரசு வங்கிகளை மாற்ற முயல்கின்றனர்.

"அரசியல் தலைவர்கள் தம் சொந்த நலனுக்காகவே வங்கிகளையும் காப்பீட்டுக் கழகங்களையும் அரசுடைமையாக்கி-யிருந்தாலும், அதனால்தான் நாட்டில் தொழில் வளர்ச்சியும் நலிந்தோர் முன்னேற்றமும் ஏழை, எளியவரும் வங்கியில் கணக்குத் தொடங்குதலும் தடையின்றி நிகழ்ந்தன; நிகழ்கின்றன. சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மாற்றங்களுக்கும் அரசு வங்கிகளும் காப்பீட்டுக் கழகங்களும் வழி வகுத்துள்ளன.

"அரசியலிலும் பொது வாழ்விலும் நம் நாட்டில் ஊழல் மலிந்துள்ளது. எனவே, அரசு நிறுவனங்களில் அரசு, அரசியல் இவற்றைச் சார்ந்தவர்களின் குறுக்கீடுகளும் கட்டாயங்களும் தானாவே தவிர்க்க முடியாமல் வேரூன்றி விடுவது இயல்பு. இவற்றிற்கு அரசு வங்கிகள் விலக்கல்ல. அத்தகு குறுக்கீடுகளும் கட்டாயங்களுமே அரசு வங்கிகளில் அதிக அளவில் கடன்களை வழங்க அடிகோலியது. அந்தக் கடன்கள்தான் இன்று வாராக்கடன்களாக உள்ளன.

"ஆனால், அக்கடன்களைப் பெற்றோர், கடன் வாங்கும் போதே, திருப்பிக் கட்ட வேண்டுமென்ற எண்ணமில்லாதவர்கள்; அரசு அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் மிக நெருக்க-மானவர்கள், அல்லது உறவினர்கள்; திருப்பிச் செலுத்தக்கூடிய அளவிற்கு அவர்களிடம் வசதியும் பொருளும் உள்ளன. சமூகத்தில் மிக மேல்மட்டத்தில் உள்ள பெரியவர்கள் தான், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாதவர்களில் 80 விழுக்காடு. அவர்களின்

[8] வங்கிகள் : வாராக்கடன்கள் : அன்புள்ள ஆசிரியருக்கு,, தினமணி, டிச. 12, 1999, பக்கம். 6

www.tamilarangam.net



பெயர்களை நிர்வாகங்களோ, அரசோ வெளியிட்டால், தங்கள் நிலை கருதி அவர்கள் உடனே கடன்களை வட்டியுடன் கட்டிவிடக்கூடும்.

"பாகிஸ்தானில் தற்போதைய ராணுவ அரசு, உடனடியாக வங்கிக் கடனைத் திருப்பிக் கட்டாதவர்களைச் சிறையிலடைப்போம் என்று அறிவித்ததைப்போல், நம் நாட்டிலும் அறிவித்தால், ஒரு சிலரைத்தவிர, பெரும்பாலான மற்றையோர், தங்கள் சொத்து, சமூகப் பொறுப்பு, அரசுப்பணி, அரசியல் நிலை, செல்வாக்கு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, விரைவிலேயே வட்டியுடன் கடன்களைக் கட்டிவிடுவார்கள் என்பது திண்ணம்.

"தனியார் வங்கிகள் சரியாக இயங்காததால் மற்ற வங்கிகளுடன் இணைக்கப்பட்டது உலக வரலாறு. பெரிய வங்கிகள், அயல் நாட்டு வங்கிகள் எல்லாமே இதற்கு விலக்கல்ல. இந்தியாவில் உடனடி எடுத்துக்காட்டு : 'டைம்ஸ் வங்கி'யை 'எச்.டி.எஃப்சி' வங்கியுடன் இணைக்க முடிவெடுத்தது. எனவே தனியார்தான் வங்கிகளை வெற்றிகரமாகவும் லாபத்துடனும் இயக்கமுடியும் என்பது வெறும் மாயை. கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கட்டினால் எந்த வங்கியும் வளமாக இயங்கும்.

"எனவே, வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தாவிட்டால், கடன் பெற்றவர்கள் எந்த பதவியில் இருந்தாலும், அரசு பார்த்துக் கொண்டு இருக்காது என்பதை உறுதியாகத் தெரிவித்தால், அதுவே அரசு வங்கிகள் சிறப்பாகச் செயல்பட வழிவகுக்கும். தனியார் மயமாக்கும் முயற்சி வீணானது என்பதையும் புலப்படுத்தும்..."

மேற்கூறிய ஆய்வின்படி, **வாராக் கடன்கள்** என்பவை ஏறத்தாழ ரூ. 50,000 கோடி ஆகும். இந்த ரூ. 50,000 கோடி, தற்போது வட்டியோடு சேர்ந்து, ஏறத்தாழ ரூ. 100,000 கோடி இருக்கலாம்.

இதனோடுகூட, மற்றொரு உண்மையினையும் நாம் ஒப்பீட்டுக் காணவேண்டும். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை, முதலீடுகளே (Investments). பொருளியல் வல்லுநர் ஜே.எம். கீன்ஸ் (J.M. Keynes) அவர்கள் ஒருமுறை கூறினார் : **'முதலாளித்துவத்தின் உயிரும், உயிரோட்டமுமாக இருப்பது பணமே' (Money is the life-blood of Capitalism)** என்று. புதிய தொழில் முயற்சிகள் தொடங்கிட மூலதனம்

www.tamilarangam.net



(Capital) தேவை. இது பணவடிவில்தான் முதலில் உள்ளது. தொழில் முயல்வோர்கள் அனைவரும், தங்களுக்குத் தேவையான முதலீட்டுப் பணத்தை, வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றே, தத்தம் தொழிலைத் தொடங்குகின்றனர். வங்கியில் நாம் எல்லோரும் சேமிக்கின்றோம். இந்த இருப்பே (Deposit), தொழில் அதிபர்களின் கடன் நிதியாக மாறுகின்றது.

இந்த சேமிப்பு 3 வகைப்படும் : அரசாங்கச் சேமிப்பு (Govt. Savings); அரசுத் துறைகளின் பகிர்ந்தளிக்கப்படாத (Undistributed) இலாபங்களையே, அரசாங்கச் சேமிப்பு என்பர். அடுத்தது, தனியார் துறை நிறுவனங்களின் சேமிப்புகள் (Corporate Savings); அடுத்தது, குடித்தனச் சேமிப்புகள் (Household Savings). நம் நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் (Gross National Product), சேமிப்பின் பங்கு 23% ஆகும். இந்தச் சேமிப்பில், ஏறத்தாழ 76% அல்லது நான்கில் 3 பங்கு, குடித்தனங்களிலிருந்து வருகின்றன.

ஏழை–எளிய மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும், மற்றும் விவசாயிகளும், வணிகர்களும், தொழிலாளிகளும்,ஓய்வூதியக்காரர்களும், தொழில் முயல்வோர்களும்–இன்ன பிறரும் தங்களின் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து, வங்கிகளில் போடுகின்றனர். இந்த சேமிப்பு, மக்களின் உபரி (Surplus) ஆகும். 'சிறு துளி பெரு வெள்ளம்போல' மக்களால் சிறுசிறு துளியாக வங்கிகளில் பெய்யப்படும் இந்த வைப்புகள் (Deposits), பெருகிப் பெருகி, பெருங் கடல் போலப் பெருகி நிற்கின்றன. இவைகளிலிருந்தே தொழில் முயல்வோர்கள், தாங்கள் முதலீடு செய்வதற்கான கடன்நிதி பெறுகின்றனர்.

தவிர, இந்தியாவில், பொதுத்துறை நிறுவனங்கள், மிக மிகத் திறன் (Efficiency) குறைந்தவை. இவைகள், இலாபங்கள் ஈட்டுவதில்லை; எனவே, இவைகள் உருவாக்கிடும் சேமிப்பு அல்லது உபரி மிகமிகக் குறைவு. திறன் குன்றிய, நோய் பிடித்த பொதுத்துறை நிறுவனங்கள் பல, நாட்டிற்கு நஷ்டத்தையே விளைவிக்கின்றன. ஆனால், தனியார் துறை நிறுவனங்களோ, திறன் மிகுந்தவை; பெருத்த இலாபத்தில், இவை இயங்குகின்றன. எனவே, நாட்டின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் பொருளாதார உபரியினை (Economic Surplus) தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களை விட அதிகமாகத் தருகின்றன. ஆகவே, நாட்டுடைமையான தொழில்களையும், தனியார் மயமாக்கிடுதல் வேண்டும் என்ற கருத்து அண்மைக் காலங்களில் மிகப்பலமாக, உலகெங்கிலும் ஒலிக்கப்படுகின்றது. நம் நாட்டிலும், தனியார்

www.tamilarangam.net



துறை ஆதரவாளர்களால், மக்கள் முன், இக்கருத்து திரும்பத்திரும்ப வலியுறுத்தப்படுகின்றது. அஸ்ஸோசாம் தலைவர் ஏ. மஜும்தார்[9] அவர்கள் கூறுகின்றார்.

**"... ஒருங்கிணைக்கப்பட்ட (Organized) தனியார் துறைகளின் முதலீடு, ரூ. 75,000 கோடியாக உள்ளது; ஆனால், மைய, மாநில அரசுகளின் பொதுத்துறை நிறுவனங்களிலேயோ, ரூ. 130,000 கோடியைவிட அதிகமாக முதலீடு உள்ளது. இதோடு கூட, அரசாங்கத்துறை நிறுவனங்களான (Departmental Undertakings) இரயில்வேக்கள், தபால் தந்தித்துறை–போன்ற துறைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், தற்போது மொத்தமுதலீடு, ரூ. 300,000 கோடியினைத் தாண்டும். இந்தப் பணம், இந்திய மக்களின் பணம். இந்தப் பிரம்மாண்டமான முதலீட்டின் பலன் (அல்லது இலாபம்) என்ன? பொதுத்துறை நிறுவனங்களில், மொத்த பலன் (இலாபம்) 1%-க்கும் குறைவாகவே உள்ளது. ஆனால், ஒருங்கிணைக்கப்பட்ட தனியார் துறைகளின் இலபாம், சராசரியாக 10% ஆக உள்ளது..."**

**'இந்து'** நாளேட்டின் செய்தியின்படி, **வாராக்கடன்களின்** மொத்தம் ரூ. 50,000 கோடி என நாம் அறிகிறோம். இந்தத் தொகை, மஜும்தார் குறிப்பிடுகின்ற 1991–ஆம் ஆண்டில், குறைவாக இருக்கலாம். இருப்பினும், மஜும்தார் குறிப்பிடுகின்ற தனியார்துறை முதலீடான ரூ. 75,000 கோடியின் பெரும் பகுதி, **பொதுத்துறை வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட வாராக் கடன்களாகக் கூட இருக்கலாம்.** இவ்வாறு, பொதுத்துறையின் நஷ்டத்தினை உருவாக்கிடுவதில், தனியார்துறையின் பங்கும் குறிப்பிடத்தகுந்ததே.

எனவே, கண்ணன் கி.நா. அவர்களின் கூற்றும் பொருத்தமான ஒன்றாகவே தோன்றுகிறது. 'அரசியலிலும் பொது வாழ்விலும், நம் நாட்டில் ஊழல் மலிந்துள்ளது...' என்று கூறி, பொதுத்துறை வங்கிகளிடமிருந்து மிகப்பெரிய அளவில் கடன் பெற்றோர், கடன் பெறும்போதே, கடனைத் திருப்பிச் செலுத்திட வேண்டும் என்ற எண்ணமில்லாதவர்கள் என்ற கண்ணன் கி.நா. அவர்களின் கூற்று, பேராசிரியர் ஷ்னீடர் அவர்களின் கூற்றையும்* உண்மையாக்குகிறது.

அதாவது, வளரும் நாடுகளில், வரிஏய்ப்பினைவிட சட்டத்தினையே

*(loc.cit.) [9] A. Mazumdar, 1991, op.cit. p.12

www.tamilarangam.net



ஏய்ப்பதால்தான், நிழல் பொருளாதாரம் வளருகின்றது என்று பேராசிரியர் ஷ்னீடர் கூறுகின்றார். அதாவது, கடன் வாங்கும் போதே, திருப்பிக் கட்ட வேண்டாம் என்ற எண்ணம் கொண்டவர்கள், சட்டத்தையே ஏய்ப்பவர்கள். சட்டத்தை ஏய்த்து, அரசுக்குப் பொருளாதார நஷ்டத்தை ஏற்படுத்துபவர்களே நிழல் பொருளாதாரத்தின் காரணகர்த்தாக்கள்.

எனவே, இந்த வாராக்கடன் தொகையான ரூ. 50,000 கோடி ரூபாய் தமிழ்நாட்டின் இன்றைய (1998) தேசிய வருமானத்தில், ஏறத்தாழ 3 மடங்கான, அல்லது 3 ஆண்டுகளுக்கு, தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மொத்த தேசிய (மாநில) உற்பத்தியின் 3 ஆண்டுகால மதிப்பீடு ஆன—இந்த வாராக்கடனும் நிழல் பொருளாதாரத்தின் பாற்பட்டதே. இந்த வாராக்கடன் ஆன ரூ. 50,000 கோடியின் மொத்த வட்டி ரூ. 50,000 கோடி ரூபாய் என, தோராயமாகக் கூறுவோம் எனின், இந்த நிழல் பொருளாதாரத்தின் தற்போதைய பரிணாமம் தெளிவாக விளங்கும்.

மேலும் ஆஸ்திரியாவில் உள்ள கெப்லர் பல்கலைக் கழகத்தின் **(Kepler University, Linz, Austria)** பொருளியல் பேராசிரியர் **ஃபிரடெரிக் ஷ்னீடர் (Prof. Frederick Schneider)**, நிழல் பொருளாதாரம் குறித்த விரிவான ஆராய்ச்சியினை மேற்கொண்டார். உலகிலுள்ள வளரும் மற்றும் வளர்ந்த 76 நாடுகளில், நிழல் பொருளாதாரத்தின் வளர்ச்சி எவ்வாறுள்ளது; அந்நாடுகளில் நிழல் பொருளாதாரம் எவ்வாறு செயல்படுகின்றது[10] என்பதையும் பேராசிரியர் ஷ்னீடர் ஆராய்ந்தார்.

அவர்தம் ஆய்வு முடிவுகளில், சிலவற்றை நாம் தற்போது காண்போம்.

★ வளர்ந்த / முன்னேறிய / செல்வந்த நாடுகளில், அந்த நாடுகள் ஒவ்வொன்றின் மொத்த தேசிய உற்பத்தியிலும் (Gross Domestic Product), நிழல் பொருளாதாரத்தின் பங்கு, சராசரியாக 15% ஆக உள்ளது.

★ அதே போன்று, ஏழை / வளரும் / வளர்ச்சி குன்றிய நாடுகள் ஒவ்வொன்றின் மொத்த தேசிய உற்பத்தியிலும், நிழல் பொருளாதாரத்தின் பங்கு, மூன்றில் ஒரு பங்காக, ஏறத்தாழ 34% ஆக உள்ளது.

[10] Shadow Economy : The Hindu, dt. Aug. 30, 1999, p.18, Courtesy : The Economist Paper Limited, 1999, London)

www.tamilarangam.net



★ உலக நாடுகளையே நாம் இரு பெரும் வகைகளாகப் பிரித்து ஏழைநாடுகள் என்றும், செல்வந்த நாடுகள் என்றும் காணலாம். ஏழை நாடுகளில், **நைஜீரியா** மற்றும் **தாய்லாந்தில்**தான், நிழல் பொருளாதாரத்தின் பங்கு மிகவும் அதிக அளவில் உள்ளது. அந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில், அதன் பங்கு, ஏறத்தாழ 70% ஆகும். அதே போன்று, செல்வந்த நாடுகளில், **இத்தாலி, ஸ்பெயின்,** மற்றும் **பெல்ஜியத்தில்**தான் நிழல் பொருளாதாரத்தின் பங்கு மிக அதிகமாக உள்ளது. அந்நாடுகள் ஒவ்வொன்றிலும், மொத்த தேச உற்பத்தியில் அதன் பங்கு, ஏறத்தாழ 23% முதல் 28% ஆக உள்ளது.

இந்தியாவில், நிழல் பொருளாதாரத்தின் மற்றும் மிகைவாரப் பொருளாதாரத்தின் பங்கு என்ன? இதனைப் பற்றிக் கூறவந்த பேராசிரியர் சங்கீதா[11] அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்:

**".....மொத்த தேசிய வருமானத்தில் (Gross Domestic Product), 1980-81 ல், 41.71% ஆக இருந்த கறுப்புப் பணம், வரி ஏய்ப்பினாலும், கள்ளக் கடத்தலினாலும், நகர்ப்புற நிலச்சொத்துக்களை, அத்துமீறி ஆக்கிரமிப்பதாலும், அரசுச் செலவினங்களில் ஏற்படும் கசிவுகளாலும் (Leakages) உருவாக்கப்படும் கறுப்புப்பணம்– 1983–84–ல் 45% ஆகவும், 1987-88ல் 51.7%-ஆகவும் உயர்ந்தது. 1980–88 ஆண்டுகளிலேயோ, மொத்த தேசிய வருமானத்தின் வளர்ச்சியினைவிட, கறுப்புப் பணத்தின் வளர்ச்சி, சற்று அதிகமாக இருந்தது. இந்த ஆண்டுகளில், கறுப்புப் பணத்தின் வளர்ச்சி 46.5%; மொத்த தேசிய வருமானத்தின் வளர்ச்சியோ 40.00%".**

சங்கீதா அவர்களின் ஆய்வோடு ஒத்துப் போகின்ற ஒன்றாகவே, அருண்குமார்[12] அவர்களின் ஆய்வும் உள்ளது. கடந்த 1950–களில் இந்தியாவின் மொத்த தேசிய வருமானத்தில் (GDP) 35% ஆக இருந்தக் கருப்புப் பொருளாதாரம், 1990–1991ல் 40% ஆகவும், 1995–96–ல் 45% ஆகவும் உயர்ந்துள்ளது என்று அருண்குமார் குறிப்பிடுகின்றார். த்விர, கறுப்புப் பணம்

[11] Sangita S.N., 1995, Institutional Arrangements for Controlling Corruption in Public Life : Karnataka Experience, Journal of Public Administration, 1995

[12] Arunkumar, 1999 : The Black Economy of India, The Hindu, Nov. 30, 1999 P.28

www.tamilarangam.net



என்பது, இந்தியாவில், மேல் மட்டத்தில் உள்ள முதல் 3% மக்களிடையேதான் முடக்கப்பட்டுள்ளது என்றும் அருண்குமார் கூறுகிறார். இவருடைய இந்தக் கூற்று, மேலே குறிப்பிடப்பட்டுள்ள கண்ணன் கி.நா. அவர்களின் கருத்தோடு ஒப்பு நோக்கப்படும்போது நிழல் பொருளாதாரத்தின் வீச்சு நமக்குத் தெளிவாக விளங்கும்.

இந்த நிலை மிகவும் கொடூரமானது. தேசிய வருமான வளர்ச்சியை விட, கறுப்புப் பணத்தின் வளர்ச்சி, மேற்கூறிய 8 ஆண்டுகளில் அதிகமாக இருப்பதும், சரிபாதிப் பொருளாதாரமாக நிழல் பொருளாதாரம் இருப்பதும் அரசின் அரசாண்மைக்கு விடப்பட்டுள்ள மாபெரும் சவாலாகும்.

தவிர, 1991–ஆம் ஆண்டிற்குப் பிறகு, கறுப்புப்பணம் அல்லது நிழல் பொருளாதார வளர்ச்சியின் வீச்சு விரிவடைந்திருக்குமே தவிர, குறைந்திருக்காது. ஏனெனில், இந்த ஆண்டில்தான், இந்தியப் பொருளாதாரத்தில், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கடந்த 1980 முதலே, பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கும், வர்த்தக வணிக நிறுவனங்களுக்கும் மெல்ல மெல்ல இந்தியப் பொரளாதாரம் திறந்து விடப்பட்டது. ஆனாலும், 1991 முதல் தான் ஒரு நிரந்தரமான கொள்கையாக, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ஆக்கப்பட்டன; அவைகளின் ஆழமும், வீச்சும் அந்த ஆண்டிலிருந்துதான் அதிகமாயின.

உலகமயமாதல், பன்னாட்டு மயமாதல், அங்காடியினைத் திரும்பக் காணுதல் (Re-Discovery of Market), போன்றவற்றின் மற்றொரு பரிமாணம், காகிதப் பொருளாதாரத்தின் (Paper Economy) வளர்ச்சியாகும், அதாவது, நிலச்சொத்து (Real Estate) வாங்குதல், விற்றல், பங்குப் பத்திரச் சந்தை (Share Market), இடையீட்டுத் தரகு வணிகம் (Agency, Transactions) ஆகியவைகளே, காகிதத் பொருளாதாரத்தின் அம்சங்கள். இவைகள் வளரும் போது, நிழல் பொருளாதாரமும் பெருமளவில் வளருகின்றது.

இதிலிருந்து மற்றொரு உண்மையினையும், நாம் தருவிக்கலாம். இந்திய மக்கள் தொகை, இன்று 100 கோடி. இதில் வருமான வரிகட்டுவோர் 2% ஆக உள்ளனர். ஆனால், நிழல் பொருளாதாரம், மேல் மட்டத்திலுள்ள 3% மக்களிடையேதான் பெரும்பாலும் கால் கொண்டிருப்பதாக அருண்குமார் கூறுகிறார். அதாவது, நிழல் பொருளாதாரத்தினை இயக்கிடும் சுமார் 3% மேல் மட்டத்தினருள், 1% மக்கள் வருமான வரி வரம்பிற்குள் இதுகாறும் வரவில்லை என்று இதன் மூலம் அறியலாம்.

www.tamilarangam.net



தவிர, ஓர் அரசு ஊழியர், தான் பெறும் சம்பளத்திற்கு உரிய வேலைப்பளுவின் (Work Load) அடிப்படையில் தன் பணியினைச் செய்யாது, குறைவாகச் செய்வாராயின், அங்கும் கறுப்புப் பணம் தோன்றுகிறது என்று அருண்குமார் கூறுகின்றார்.

இதனை, ஒரு சான்றுடன் நாம் விளக்கலாம், பல்கலைக்கழக மான்யக் குழுவின் (University Grants Commission) விதிகளின்படி, ஒரு கல்லூரியின் வேலை நாட்கள் ஆண்டிற்கு 180 நாட்கள். ஒரு மாணவர், ஒரு கல்வியாண்டில், 900 பாட மணிகள் ஆஜராக வேண்டும். அதே போன்று, ஒரு கல்லூரி ஆசிரியர், ஒரு வாரத்திற்கு 16 பாட மணிகளும், ஒரு வருடத்திற்கு 480 பாடமணி வகுப்புகளும் எடுத்தல் வேண்டும்.

ஒரு கல்லூரி ஆசிரியர், 15–ஆண்டுகளுக்கு மேல் பணி செய்திருந்தாராயின் அவர் பெறும் மாதச் சம்பளம் சராசரியாக ரூ. 20,000/–; ஒரு ஆண்டிற்கு இது ஏறத்தாழ ரூ. 2.5 லட்சமாக உள்ளது. அதாவது, ஒரு மணி நேரம் பாடம் எடுப்பதற்கு, அவருக்கு அளிக்கப்படும் ஊதியம் குறைந்தபட்சம் ரூ. 500. எனவே, அவர் ஒரு மணி நேரம் வகுப்பு எடுக்காமல் இருந்தார் எனின், செய்யாத வேலைக்கு அவர் சம்பளம் வாங்குகிறார். பாடம் எடுக்காது அவர் பெறும் கறுப்புப் பணம் ரூ. 500/– ஆகும். தவிர, பாடம் எடுக்காது விட்ட அந்த வகுப்பில், 40 மாணவர்கள் இருப்பின், 40 மனித மணிகள் வீணடிக்கப்பட்டுவிட்டன என்று பொருள்.

இந்த ஆய்வினை, அரசின் எல்லாத் துறைகளுக்கும் கொண்டு செல்வோம் எனில், நிழல் பொருளாதாரத்தின் வீச்சு, மிகத்தெளிவாக நமக்கு விளங்கும், இதன் அடிப்படையில், இந்திய பாராளுமன்றத்தைப்பற்றிய ஓர் ஆய்வினை நாம் மேற்கொள்ளலாம்.

இந்தியப் பாராளுமன்றம் (Parliament) இரு அவைகளைக் கொண்டது. ஒன்று, மக்களவை எனப்படும் லோக்சபா (Lok Sabha); மற்றொன்று, மாநிலங்கள் அவை எனப்படும் ராஜ்ய சபா(Rajya Sabha).

நம் நாட்டின் பாராளுமன்ற (Parliament) நடவடிக்கைகள் பற்றியும், பாராளுமன்றத்தை நடத்திட ஆகும் செலவினங்கள் பற்றியும், ஆராய்ந்த லதா ஜிஷ்ணு[13] அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

[13] Latha Jishnu, 1994 : Even at Rs. 2750, The Talk Goes on : Economic Times, (Madras), Aug. 14, 1994, P.7

www.tamilarangam.net



**★ பாராளுமன்றத்தினை நடத்திட, ஒரு நிமிடத்திற்கு ஆகும் சராசரிச் செலவு ரூ. 2570 ஆகும். இது, 1994ஆம் ஆண்டின் கணக்கீடு.**

அதாவது, வருடத்தின் 365 நாட்களும் பாராளுமன்றத்தின் அமர்வு (Session) நடத்தப்படுவதில்லை; அல்லது, எல்லா நாட்களும் தன் பணிகளைப் பாராளுமன்றம் செய்வதில்லை. அமர்வு நாட்களின் ஒவ்வொரு நாளிலும், பாராளுமன்றம் 24 மணி நேரமும், விவாதங்கள் நடத்திடுவதில்லை. சில நாள்களில் 1 மணி நேரத்திற்குக் குறைவாகவும், வேறு சில நாள்களில் 12 மணி நேரம் கூட, பாராளுமன்றம் கூடுவதை நாம் காண்கிறோம்.

சான்றாக, மும்பை மாநகரிலிருந்து வெளியாகும் **"அவுட்லுக்"**[14] என்ற ஆங்கில வார இதழ், **பாராளுமன்றம் (Lok Sabha)** ஆண்டு தோறும் அமர்ந்த அமர்வுகள் பற்றிப் பின்வரும் பட்டியலிடுகிறது.

**பாராளுமன்றப் பணிகளின் போக்கு**

| ஆண்டு | பாராளுமன்ற (Lok Sabha) அமர்வுகளின் எண்ணிக்கை (நாட்களில்) |
|---|---|
| 1952 | 93 |
| 1962 | 116 |
| 1972 | 111 |
| 1982 | 92 |
| 1992 | 98 |
| 1995 | 78 |
| 1997 | 65 |

எனவே, ஆண்டு தோறும், பாராளுமன்ற அமரும் நாட்களின் மொத்த எண்ணிக்கை வரவரக் குறைந்து கொண்டே வருவதைக் காண்கிறோம்.

எனவே, ஒவ்வொரு ஆண்டிலும் பாராளுமன்றத்தின் அமர்வுகளுக்காக, அரசு ஏற்றிடும் செலவினைக் கணக்கிட்டுப் பார்த்தால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஆகும் மொத்த செலவு நமக்குத் தெரியும். இந்த

[14] Outlook : Working on Governance, Dec. 20, 1999, pp. 12-13

www.tamilarangam.net



அமர்வுகள், ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனை மணி நேரங்கள் நடந்தன; ஓர் ஆண்டில் எவ்வளவு நாட்கள் நடந்தன என்றும் கணக்கிடலாம்.

இதனைத்தான் லதா ஜிஷ்ணு, 1994–ஆம் ஆண்டிற்குச் செய்திருக்கிறார். அந்த 1994–ஆம் ஆண்டில், பாராளுமன்றம் அமர்வு செய்திட்ட மொத்த மணி நேரங்களைக் கணக்கிட்டு, அந்த ஆண்டில் பாராளுமன்றத்திற்காக அரசு ஏற்றிடும் மொத்த செலவுகளையும் கணக்கிட்டு, அதிலிருந்து ஒரு நிமிஷத்திற்கு ஆகும் செலவு என்ன என்பதைக் கணக்கிடலாம்.

லதா ஜிஷ்ணு அவர்கள், 1994–ஆம் ஆண்டில் இது குறித்து ஏற்பட்ட செலவினங்கள் குறித்து ஆராய்ந்து, அதே 1994–ஆம் ஆண்டில், பாராளுமன்றம் ஒரு நிமிஷம் அமர்ந்திட அரசிற்கு ஆகும் செலவு எவ்வளவு என்று கணக்கிட்டார்; அச்செலவு, ஒரு நிமிஷத்திற்கு ரூ. 2570 என்று அவர் கண்டார். பாராளுமன்ற மக்களவைக் (Lok Sabha) கான செலவுகளை கீழ்க்காணும் வகையில், இனம் பிரித்து லதா ஜிஷ்ணு பட்டியலிடுகிறார்.

**லோக் சபா செலவினங்கள் (ரூ. கோடிகளில்)**

| வ. எண் | வகை | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 | 1994–95★★ |
|---|---|---|---|---|---|---|
| 1. | அவைத்தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் | 0.12 | 0.12 | 0.14 | 0.15 | 0.15 |
| 2. | எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அவரது அலுவலகம் | – | – | – | 0.11 | 0.12 |
| 3. | உறுப்பினர்கள் ★ | 11.03 | 12.16 | 13.52 | 20.47 | 20.31 |
| 4. | பாராளுமன்ற அலுவலகம் (Secretaries) | 7.22 | 7.63 | 13.29 | 17.66 | 17.77 |
| 5. | இதர செலவுகள் | 0.35 | 0.45 | 0.45 | 0.61 | 0.65 |
| | மொத்தம் | 18.72 | 20.36 | 27.40 | 39.00 | 39.00 |

குறிப்பு : ★ உறுப்பினர்களின் மாதச் சம்பளம், இதர படிகள், அவர்களின் இரயில் பயணச் செலவினங்களில் ஒரு பகுதி இதில் அடங்கும். ஆனால் வீடு, ஏ.சி. வசதி, அறைகலன்கள் (Furniture) போன்ற செலவினங்கள் இதில் சேர்க்கப்படவில்லை.

★★ இது, தோராய மதிப்பீடு.

www.tamilarangam.net



இவை ஏறத்தாழ 5,6 ஆண்டுகளுக்கு முந்தியக் கணக்கீடுகள் தற்போதோ, கி.பி. 2000த்தில், இந்தச் செலவு பல மடங்கு உயர்ந்திருக்கும். அதாவது, 1994–95ம் ஆண்டில், ஏறத்தாழ, ரூ. 39.00 கோடியில் இருந்த இச்செலவு, 1999–2000–ல், ஏறத்தாழ ரூ. 70 கோடியைத் தாண்டக்கூடும். தவிர பாராளுமன்றத்தின் மாநிலங்கள் அவைக்கு, 1994–95–ஆம் ஆண்டில், இச்செலவு ஏறத்தாழ ரூ. 16.50 கோடியாக இருந்ததாக, லதா ஜிஷ்ணு குறிப்பிடுகின்றார்.

ஆக, இந்த இரு அவைகளுக்கும் – லோக் சபா, ராஜ்யசபா–சேர்த்து, 1999–2000 ஆண்டில் ரூ. 100 கோடி ஆகும் என நாம் ஊகிக்கலாம். அதே போன்று பாராளுமன்ற அமர்விற்காக, 1994–95 ஆம் ஆண்டில், ஒரு நிமிடத்திற்கு ஆகும் செலவான ரூ. 2570 தற்போது, ரூ. 6000த்தைத் தாண்டக்கூடும் என்று நாம் ஊகிக்கலாம். இதில், பாராளுமன்றத் **தேர்தலுக்கான** செலவினங்கள் கணக்கிடப்படவில்லை.

இங்கு, இரு பெரும் விஷயங்களைக் குறிப்பிடுகின்றார், லதா ஜிஷ்ணு அவர்கள் :

(1) பத்திரிகைகள்தாம், மக்களைப் பற்றியப் பல பிரச்சினைகளை **முதலில்** வெளிக்கொணர்கின்றன. **அதற்குப் பின்னரே**, பாராளுமன்ற உறுப்பினர்களால், அப்பிரச்சினைகள் பாராளுமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விவாதிக்கப் படுகின்றன.

(2) பாராளுமன்றத்தின் மொத்த அமர்வுகளுக்கான நேரத்தில், ஏறத்தாழ 12% விழுக்காடு நேரமே, இதுவரையிலும் **கேள்வி நேரமாக** இருந்து வந்திருக்கிறது.

மக்களின் பிரச்சினைகளைப் பத்திரிகையாளர்கள் வெளிக் கொணர்ந்த பிறகு, அவைகளைப் பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்வது என்பது, முன்னுக்குப் பின்னானது என்று, லதா ஜிஷ்ணு அவர்கள் கூறுகிறார்.

இதனை, நாம் ஒரு சான்றின் வாயிலாகக் கூறலாம்.

தன் தொகுதி மக்களோடு கலந்து பழகி, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவர்களின் இதய நாடிகளை அறிந்து, செயல்படும் உறுப்பினராக, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருப்பாராயின், அவருக்குத்தான் மக்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரச்சினை எதுவும் முதலில் தெரிய வரும்; அவர் வாயிலாகத்தான், முதலில் பாராளுமன்றத்திற்கும் பின்னர், பாராளுமன்றத்தின் வாயிலாக, அது பத்திரிகைகளுக்கும் செய்தியாகக் கிடைக்கும். இது வண்டிக்கு முன் குதிரையைக் கட்டி ஓட்டுவது போலாகும். மாறாக, பத்திரிகைகளில் செய்தியாக மக்களின் பிரச்சினை முதலில் வெடித்த பின்னர்தான், மக்கள் பிரதிநிதி ஒருவருக்கு அப்பிரச்சினை தெரியவருகிறது என்றால், அது, குதிரைக்கு முன் வண்டியைக் கட்டி, ஓட்ட முயற்சிப்பது போலாகும்.

இவ்வாறு வண்டியின் முன் குதிரையைக் கட்டாமல், குதிரையின் முன் வண்டியைக் கட்டுவது போன்று, மக்கள் பிரதிநிதி ஒருவர் செயல்படுவாராயின், மக்கள் அவர்மீது நம்பிக்கை வைத்துத் தேர்ந்தெடுத்ததையே, மறுதலிப்பு செய்வதற்கு ஈடாகும். கல்லூரி ஆசிரியர் ஒருவர், வகுப்பு எடுக்காமல், சம்பளமும் இதர சலுகைகளும் பெறுவதற்கு ஒப்பாகும் இது. அதாவது, மக்கள் தன் மீது வைத்த நம்பிக்கையையே (Trust) அந்த மக்கள் பிரதிநிதி மறுதலித்து நம்பிக்கை முறிவு (Breach of Trust) செய்திருக்கிறார் என்று பொருளாகிறது.

ஏனெனில், இராணுவ அரசு அல்லாத மக்களின் அரசு (Civil State) பற்றியும், பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் (Representative Government) பற்றியும் கூற வந்த ஜான் லாக்கே[14] அவர்கள், பின்வருமாறு கூறுகிறார்.

> **"... சட்டங்களை இயற்றிடும் அதிகாரத்தைப் பெற்றவர்களும், அவைகளை நடைமுறையில் செயல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டவர்களும், மக்களின் நம்பிக்கை (Trust), தங்களின் மீது சுமத்தப் பெற்றவர்களாவார்கள். இந்த நம்பிக்கை–சார் (Fiduciary), அல்லது அறங்காவலர் பணி போன்ற (Trustee) அதிகாரமே, அரசியல் அதிகாரம் என்பது ..."**

எனவே, தம் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையினை முறித்தும், பிரதிநிதித்துவப் பணிகளைச் செவ்வனே செய்யாதும், பிரதிநிதித்துவ அதிகாரங்களைச் சுயவிளம்பரத்திற்காகவும், சுயலாபத்திற்காகவும் பயன்படுத்தியும், பிரதிநிதித்துவ மன்றங்களையே வெறும் **"வார்த்தை கத்தும் வாதியார்தம் மன்றங்"**களாக ஆக மாற்றியும்விடும் மக்கள் பிரதிநிதிகளும், ஊழலையும், நிழல் பொருளாதாரத்தையும் உருவாக்கிடுபவர்களே.

[14] John Locke, 1690: The Second Treatise of Government, pp 173-181.

www.tamilarangam.net



மேலும், வளரும் / ஏழை நாடுகளைப் பொறுத்தமட்டில், மிகவும் கவலைக்குரிய விஷயம் ஒன்று உண்டு என பேராசிரியர் ஷ்னீடர் குறிப்பிடுவதை நாம் காணவேண்டும்.

**"....வளரும் நாடுகளில், வரி ஏய்ப்பினால் நிழல் பொருளாதாரம் முடுக்கி விடப்படுவதில்லை. பணக்கார நாடுகளோடு, ஒப்பிடும் போது, வரி ஏய்ப்பு என்பது, வளரும் நாடுகளில் குறைவாகவே உள்ளது. வளரும் நாடுகளில், நிழல் பொருளாதாரம் முடுக்கி விடப்படுவதின் அடிப்படைக் காரணம், சட்டத்தையே ஏய்ப்பதாகும்...."**

எனவே கள்ளப்பணமும், கறுப்புச் சந்தையும், சட்டத்தை ஏய்ப்பதும் பெருகினால், நிழல் பொருளாதாரம் அரசோச்சத் தொடங்கும். இவ்வகை கறுப்புப் பணமும், கள்ளப்பணமும், வெளிநாட்டு வங்கிகளில் புகலிடம் தேடும்; அல்லது, வெளிநாடுகளில், இவைகள் முதலீடுகளாக மாறுவதும் உண்டு. தனிநபர்கள் அல்லது ஒரு சில குடும்பங்கள், மாபெரும் பொருளாதார இராஜ்ஜியங்களை உருவாக்கி, அவற்றின் உரிமையாளர்களாக மாறுவர். பொதுமக்களின் நேரடிப் பார்வையிலிருந்தும், அரசின் சட்டதிட்டங்கள், மற்றும் கட்டுப்பாடுகள் – இவைகளினின்றும், தங்களின் பொருளாதார இராஜ்ஜியங்களை (Economic Empire) காப்பாற்றிக் கொள்ள அரசியலிலும் இவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தங்களின் ஆளுமையைக் காட்டிடுவர்; அரசியல் சதுரங்கத்தில் விளையாடத் தொடங்குவர். மேலும் நிழல் பொருளாதாரத்தின் ஆழம் அதிகமாகி, எல்லை விரிவடையும் போது, நகர்ப்புறக் குற்றங்கள் (Urban Crimes) பெருகத் தொடங்கும். இந்த நிழல் பொருளாதாரம். அரசியலைத் தாக்கம் செய்து, ஆட்டிப் படைக்கும் போது, அரசியலே குற்றவாளிகள் மயமாக்கப்படும்.

சான்றாக, மும்பையிலிருந்து வெளியாகும் 'அவுட்லுக்' வார இதழ், குற்றவாளிகள் மயமாக்கப்படும் அரசியல் குறித்து, ஆய்வுக் கட்டுரை[15] ஒன்று, வெளியிட்டுள்ளது. கடந்த 1998 ஆம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களைப் பற்றியத் தகவல்களைத் திரட்டி, அத்தகவல்களை ஆய்வு செய்திட, நீதிபதிக் குழு ஒன்றினை, "அவுட்லுக்"

[15] Towards A Cleaner Poll : Outlook, Feb. 23, 1998, pp 10-18

www.tamilarangam.net



பத்திரிகை அமைத்தது.

நீதியரசர் **குல்தீப் சிங் (Justice Kuldip Singh)**, மத்திய அரசின் முன்னாள் உள்துறைச் செயலர் **மாதவ் காட்போலே (Madhav Godbole)**, மஹாராஷ்டிரா மாநில முன்னாள் ஆளுநர் **சி. சுப்ரமணியம் (C. Subramnaiam)**, மற்றும் **சுவாமி அக்னிவேஷ் (Swami Agnivesh)**- இவர்களே, அந்த ஆய்வுக் குழுவின் நீதிபதிகள்.

சுற்றுப்புறச் சூழலை (Environment) மாசுபடுத்தல் மற்றும் ஊழல், இவற்றிற்கெதிராக வரலாற்றுச் சிறப்புமிகு தீர்ப்புகளைத் தந்து, நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முன்மாதிரி படைத்தவர் குல்தீப் சிங். பாபர் மசூதி இடிப்பிற்குப் பிறகு, தன்னுடைய பதவியை விட்டு விலகியவர் மாதவ் காட்போலே. ஊழலை எதிர்த்துப் போராடிக் கொண்டிருப்பவர் சி. சுப்பிரமணியம். சுவாமி அக்னிவேஷ், ஒரு சமூகப் போராளி.

இந்த நீதிபதிகள் தந்த ஆலோசனைகளின் அடிப்படையில், 1998–ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்ட, அனைத்து வேட்பாளர்களிலும், 72 பேரை "அவுட்லுக்" இதழ், அடையாளங்கண்டது. இந்த 72 பேரும் அன்றைய நிலையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள்; அல்லது வழக்குகள் நிலுவையில் உள்ளவர்கள். மேற்கூறிய நீதிபதிகளின் குழுவின்படி, இந்த 72–பேரும் தேர்தலில் நிற்கும் தார்மீக உரிமை அற்றவர்கள்.

இன்றைய நிலையில், இந்த 72–பேரில் உள்ள வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கலாம்; அல்லது, நிரூபிக்கப்படாமல் போயிருக்கலாம். இருப்பினும், மெல்ல மெல்லக் **குற்றவாளிகள் மயமாக இந்திய அரசியல்** மாறிக்கொண்டிருக்கிறது எனற உண்மையினை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதனையொத்த மற்றொரு உண்மை : உற்பத்திச் செலவுகள் குறைந்த ஒரு பொருளாதார அமைப்பாக (Low-Cost Economy) இருந்த இந்தியப் பொருளாதார அமைப்பு, உற்பத்திச் செலவுகள் தொடர்ந்து உயரும் (High Cost Economy) ஒரு பொருளாதார அமைப்பாக விரைவாக மாறி, தற்போது நிழல் பொருளாதாரம் (Shadow Economy) மிகவும் கொண்ட, அல்லது மிகைவாரம் தேடும் (Rent-Seeking) ஒரு பொருளாதார அமைப்பாக, அதி விரைவாக மாறிக்கொண்டுள்ளது என்பதே.

www.tamilarangam.net



இவ்வாறு, ஊழலும், கள்ளப்பணமும், கறுப்புச் சந்தையும் கள்ளக் கடத்தலும், மிகப்பெரும் வளர்ச்சி கண்டு, சட்டபூர்வமான அரசுக்கே (State) சவால் விடும் அளவிற்கு ஒரு நாட்டின் நிழல்/இணைப் பொருளாதாரம் (Parallel Economy) செழித்தோங்கி விடுமாயின், பல்வேறு ஆட்சிகளும், அரசாங்கங்களும், சீர்குலைக்கப்பட்டு, அவைகளின் பொருளாதாரம் எவ்வாறு வீழ்த்தப்படுகிறது என்பதை அகஸ்டின் ருசிண்டானா மேலும் குறிப்பிடுகின்றார்.

**"... ஆப்பிரிக்காவில், தேசிய, சமூக, மற்றும் பொருளாதார வளர்ச்சியினை, ஊழல் சீர்குலைத்து விட்டது. உண்மையில், ஒரு தேசத்தின் வீழ்ச்சியினை நோக்கி, ஊழல்தான் அத்தேசத்தினை கொண்டு செல்கிறது. இதற்கு சான்று, சாய்ர் (Zaire), மற்றும் சோமாலியா நாடுகள் ஆகும். பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் (Marcos) அரசு வீழ்ந்ததும், இதற்கு மேலும் ஒரு சான்று. அண்மையில், அல்பேனியா நாட்டில், அரசின் நிறுவனக் கட்டமைப்பு சீரழிந்ததும், பாகிஸ்தானில், அரசாங்கங்கள் அடிக்கடி வீழ்வதும், பெரும் ஊழல்களினால்தாம்.**

**... ஊழலும், அதனோடு கூட, பொருளாதார மற்றும் அரசியல் நிர்வாகத் திறமையின்மையும், ஆப்பிரிக்காவின் அரசியல் ஸ்திரத் தன்மையினைச் சீரழித்ததோடு மட்டுமில்லாமல், மிகப்பெரும் அரசியல்-அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கும் காரணிகளாக அமைந்தன."**

இத்தகைய நிழல் பொருளாதாரம் மற்றும் ஊழலின் பெருக்கத்தால், அதன் மிகை வேகத்தால் மிகப் பெரும் அளவில் பாதிக்கப்படுபவர்கள், ஏதிலிகள் (Destitutes), ஏழைகள், எளியவர்கள், மற்றும் நடுத்தர வர்க்கத்து மக்களே, அன்றாடங்காய்ச்சிகளும், தினக்கூலிகளும், சிறு, மற்றும் விளிம்பு நிலை (Marginalized) விவசாயிகளும், கீழ் மட்ட நடுத்தர வர்க்கத்தினரும், ஊழலின் பெருக்கத்தால், தங்களின் வாழ்க்கை முறையும், நியதியும் நிலைகுலைக்கப்பட்டுச் சூறையாடப்படுவதைக் காண்பர். **'கஞ்சிக்கு உப்பில்லை'** என்பாரும் **'காபிக்கு சர்க்கரை இல்லை'** என்பாரும், வாழ்க்கைப் போராட்டத்தில், தாங்கள் தோல்வியுறுவதைக் காண்பர். எனவே, எதிர்காலத்தைப் பற்றிய அச்சமும், பாதுகாப்பற்ற உணர்வும் (Sense of

www.tamilarangam.net



Insecurity), எதிர்காலத்தைப் பற்றிய பய உணர்வும், நிச்சயமற்ற எதிர்பார்ப்பும் கொண்டு வாழும் இத்தகைய மக்களிடையேதாம், அடிப்படைவாதமும் (Fundamentalism), தீவிரவாதமும் (Extremism) மற்றும் வன்முறைப் போக்குகளும் வேர்கொள்ளத் தொடங்குகின்றன. குறிப்பாக, இச்சமூகப் பிரிவினைச் சேர்ந்த இளைஞர்கள், வேலையில்லாத் திண்டாட்டத்தினால் வெறுப்பு அடைந்த இளைஞர்கள், பெரும்பாலோர், மேற்கூறிய வழிகளையே தேர்ந்தெடுக்கின்றனர்.

இந்நிலையில் இதன் தீர்வு தான் என்ன? பொருளியலில் நோபல் பரிசு பெற்ற **பேராசிரியர் அமர்தியா சென் (Amartya Sen)** அவர்கள் கூறுவதினின்றும் ஊழல் ஒழிப்பிற்கான ஒரு சில அடிப்படைகளை நாம் பெறலாம்.

★ ஒரு நாட்டின் எல்லா மக்களுக்கும், குறிப்பாகச் சாமான்யர்–களுக்கும், ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும், ஏதிலிகளுக்கும் அரசியல்–சமூகப்–பொருளாராதாரச் சுதந்திரம் அளித்திடும் முயற்சிதான், பொருளாதார வளர்ச்சியின் உண்மையான நோக்கம்.

★ இச்சுதந்திரம், எல்லா மக்களையும் சென்றடைய வேண்டுமாயின், அந்நாட்டில் ஜனநாயகம் முழுமையாகச் செயல்பட வேண்டும்.

★ ஜனநாயகம், ஒரு நாட்டில் செம்மையாகச் செயல்பட வேண்டுமாயின், ஊழல் அற்ற ஒரு சமூகப்–பொருளாதார அரசியல் அமைப்பை அந்நாடு பெற்றிருத்தல் வேண்டும்.

எல்லா மக்களையும் ஜனநாயகம் சென்றடைய வேண்டுமாயின், ஜனநாயகம் பரவலாக்கப்பட வேண்டும். அரசியல் அதிகாரம், பொருளாதார வளர்ச்சி, இவற்றால் ஏற்படும் பயன்கள் எல்லோரையும் சென்றடைய வேண்டும். ஒரே ஒரு மையத்தில் அதிகாரம் குவிந்திருப்பின் அது ஊழலுக்கே வழி வகுக்கும். எனவே, அதிகாரப் பரவலாக்குதலின் ஓர் அம்சம் தான், கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி அரசியல் நிர்வாக அமைப்புக்களுக்கும், அதிக அதிகாரம் கொடுத்தல்.

இது தொடர்பாக, வேறொரு கேள்வியும் எழுப்பப்படுகிறது. கிராமப் பஞ்சாயத்து அல்லது ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் போன்ற அடிநிலை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரமும் நிதிப் பொறுப்பும்

www.tamilarangam.net



கொடுத்தால், இதன் விளைவாக ஊழல் பரவலாக்கப்பட்டு, அதிகமாகிறது என்ற ஒரு குற்றச்சாட்டும் எழுகிறது. இதனைப் பற்றிக் கூற வந்த சாமிநாதன் எஸ். அங்கலேசாரியா அய்யர்[16] அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்.

இந்தியாவில், பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. கிராமப்புற ஆட்சி அமைப்புகளுக்கு, அதிக அதிகாரமும், நிதியும் கொடுத்தாலே, ஊழல் பரவலாக்கப்படுகின்றது என்பது. இக்கருத்தில் உண்மை இருக்கிறதா? இல்லையா? என்றால் எஸ்.எஸ்.ஏ. அய்யர் அவர்களின் கருத்து, '**இல்லை**' என்பதுதான்.

இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பல்கலைக் கழகத்தினைச் (Sussex University) சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ரிச்சார்ட் குரூக், ஜேம்ஸ் மேனர் (Richard Crook, James Manor) ஆகிய இருவரும், 1980–களில், கர்நாடக மாநிலத்தின் ஊராட்சிகளைப் பற்றி மேற்கொண்ட ஆய்வில், பின்வரும் முடிவுகளுக்கு வந்துள்ளனர் என்று எஸ்.எஸ்.ஏ. அய்யர் கூறுகின்றார். அய்யர் கூறுவதாவது :

> **"... ஊராட்சி மன்றங்கள், ஊழலை அதிகப்படுத்துவது போலத் தோன்றினாலும், உண்மையில், அவைகள் ஊழலைக் குறைக்கவே செய்கின்றன. அதிகாரப் பரவலாக்கத்திற்குப் பிறகு, தலைநகரிலிருந்து மாவட்டங்களுக்கும், அங்கிருந்து வட்டங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் ஊழல் பரவி விடுவதால், எல்லோருக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கு ஊழல் தெளிவாகத் தெரியத் (Visible) தொடங்குகிறது. இந்தத் தெரியும் தன்மை (Visibility) அதிகமாக அதிகமாக, ஊழலே அதிகரித்து விட்டது போல, ஒரு தோற்றம் எழுகிறது. ஆனால், பேராசிரியர்கள் குரூக், மேனர் இவர்களின் கூற்றின்படி, ஊழலின் தெரியும் தன்மை அதிகமாக, அதிகமாக, கிராம மக்கள் ஊழலை எதிர்த்துப் போராட்டங்களில் இறங்குவதால், இந்தத் தெரியும் தன்மை, ஊழலுக்குத் தடையாக மாறி ஊழலைக் குறைக்கிறது."**

அதிகாரம் பரவலாக்கப்படுவதால், ஊழல் குறைகிறது என்பதை, கர்நாடக மாநிலம் தொடர்பான ஆய்வுகள் கூறுகின்றன. எனின் இது

[16] Swaminathan S. Ankalesaria Aiyar, 1999: Does Decentralization Increase Corruption? The Sunday Times of India, Nov. 21, 1999, P. 14

www.tamilarangam.net



தொடர்பாக உலக நாடுகளின் நிலை என்ன? எஸ்.எஸ்.ஏ. அய்யர் மேலும் கூறுகிறார். அமெரிக்காவைச் சேர்ந்த கொலம்பியா வர்த்தகப் பள்ளி (Columbia Business School) யின் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் ரேமண்ட் ஃபிஸ்மேன் (Raymond Fisman) மற்றும் ரோபர்ட்டா காத்தி (Roberto Gatti) ஆகிய இருவரும், உலகின் 57 நாடுகளைப் பற்றி, இது தொடர்பான ஆராய்ச்சியினை மேற்கொண்டனர். அதாவது. 1989–1995 ஆகிய 6 ஆண்டுகளில் அதிகாரப் பரவலுக்கும் ஊழலுக்கும், இந்த 57 நாடுகளிலும் உள்ள உறவினை ஆராய்ந்தனர். பல்வேறு வகையான அதிகாரப்பரவல் அளவைகளையும் (Decentralization Measures) ஊழல் அளவைகளையும் (Corruption Measures) கையாண்டபின், அவர்கள் பெற்ற முடிவு என்னவெனின், **அதிகாரப் பரவல் கணிசமான அளவிற்கு ஊழலைக் குறைக்கிறது** என்பதே.

சான்றாக, ஊராட்சி மன்றங்களின் மொத்தச் செலவினங்களுக்கும், பிற ஊராட்சி, ஒன்றிய, மாவட்ட, மாநில அளவிலான அரசுகளின் செலவினங்களுக்கும் உள்ள விகிதமே (Proportion), அதிகாரப் பரவல் அளவையாகும். அதே போன்று, ஊழலை அளந்திட **ஃபிஸ்மேன்–காத்தி கட்டுப்பாட்டு (Fisman-Gatti Control Measure) அளவையினை** அவர்கள் உருவாக்கினர். ஊழலை அளந்திடப் பெரும்பாலும் பொருளாதாரப் பேராசிரியர்கள் கையாளும் பன்னாட்டு **இடர் ஏற்பு வழிகாட்டி ஊழல் குறியீட்டெண் (International Country Risk Guide Corruption Index)** அடிப்படையில், தங்களின் ஊழல் அளவையினை இப்பேராசிரியர்கள் வடிவமைத்தனர். இப்பேராசிரியர்களின் ஆய்வினின்றும், நாம் பெறுகின்ற செய்திகள் யாவை?

★ அரசின் செலவினங்கள் அதிகமாகப் பெருகப் பெருக, ஊழலுக்கான வாய்ப்பு அதிகமாகிறது.

★ ஒரு நாடு இதுகாறும் அடைந்துள்ள பொருளாதார வளர்ச்சியும், ஊழலின் அளவை நிர்ணயிக்கிறது. செல்வந்த நாடுகள், பெரும்பாலும் நன்றாக நிர்வகிக்கப்படுவதால், ஊழலின் அளவு அங்கு குறைவாகவே உள்ளது.

★ பத்திரிகைச் சுதந்திரமும், உயிரோட்டமுள்ள ஜனநாயகமும், மக்களின் சிவில் உரிமைகளுக்கு அரணாக அமைந்து மிகைவாரப் பொருளாதாரத்தினைக் குறைக்கின்றன.

www.tamilarangam.net



★ மக்கள் தொகையின் மிகைப் பெருக்கமும், ஊழலுக்கு வழி வகுக்கிறது.

★ ஏற்றுமதி–இறக்குமதி வர்த்தகத்தின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், மிகைவாரப் பொருளாதாரத்தினை அதிகரிக்கின்றன. மாறாக, கட்டுப்பாடுகள் குறைந்த, ஒளிவு–மறைவற்ற வர்த்தகம், ஊழலைக் குறைக்கிறது.

★ ஒரு நாட்டு மக்களிடையே நிலவிடும் இனவழிப் (Ethnic) பிரிவுகளும், இந்தியாவைப் போன்ற நாடுகளில், சாதி வழி வேறுபாடுகளும், நிர்வாகம் செய்வதை சிக்கலுக்குள்ளாக்கி, ஊழலை அதிகப்படுத்துகின்றன.

இருப்பினும், **'அதிகாரப் பகிர்வும்–ஊழலும்'** தொடர்பான பிரச்சினையில், எதிர்மறைப் போக்கு ஒன்றினையும் சுட்டிக் காட்டிட பேராசிரியர்கள் ஃபிஸ்மனும், காத்தியும் தவறவில்லை. நிதி ஆதாரங்கள் மற்றும் மான்யங்களுக்காக, மைய அரசினை மேலும் மேலும் அதிகமாகச் சார்ந்து நிற்கும் மாநில அரசுகளின் நிர்வாகத்தில் தான் ஊழல் அதிகமாகிறது என்று, ஃபிஸ்மனும், காத்தியும் கூறுகின்றனர். அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பொறுத்த மட்டில், இது உண்மையாக உள்ளது. ஏனெனில், மைய அரசிடமிருந்து நிதிகளையும், மான்யங்களையும் பெறும் அமெரிக்க மாநிலங்கள் யாருடைய பணத்தையோ செலவழிப்பதாக எண்ணுவதால், அப்பணத்தை சற்றுத் தாராளமாக செலவழிக்கின்றன. ஆனால் மாநில அரசுகள், தங்கள் மாநிலத்தில், வரி விதிப்பு, மற்ற தீர்மானங்கள் வாயிலாக, தாங்கள் பெறும் வருமானங்களை, மிகக் கவனமாகச் செலவழிக்கின்றன. எனவே, மாநில, மாவட்ட மற்றும் வட்டாட்சி, ஊராட்சி அளவில், ஊழலைக் குறைக்க வேண்டுமெனில், அந்தந்த ஆட்சிப் பரப்புகளில் வரிவிதிக்கும் உரிமையை அந்தந்த ஆட்சி மன்றங்களுக்கு அளித்திட வேண்டும் என்ற உண்மை புலனாகிறது என பேராசிரியர்கள் ஃபிஸ்மனும், காத்தியும் கூறுகின்றனர்.

இந்தியாவில் தற்போது **567169** கிராமங்கள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். ஒவ்வொரு கிராமமும், ஒரு முழுமையான குடியரசாக மாறும் போது, இந்தியக் குடியரசே, செம்மையான ஒரு குடியரசாக மலரும்

www.tamilarangam.net



வாய்ப்புள்ளதாக நாம் கருதலாம்.

ஆனால், சில சமயங்களில், அரைகுறை அதிகாரப் பகிர்வு என்பது, ஊழலை எவ்வாறு அதிகமாக்கி விடுகின்றது என்பதை, இந்தியக் கண்ணோட்டத்தில் நாம் எப்படி விளக்கலாம்?

மைய அரசிலிருந்து வரும் அதிகாரப் பகிர்வும், அதன் அடிப்படையிலான அரசுச் செலவினங்களும், மாநில அரசு அளவிலேயே நின்று விட்டால் ஊழல் பெருகும். மாறாக, மாவட்ட ஆட்சி, வட்டாட்சி, மற்றும் ஊராட்சி அளவில், அதிகாரப் பகிர்வும், செலவின அதிகாரங்களும் பரவலாக்கப்பட்டால், ஊழல் குறையத் தொடங்குகிறது. இதற்குச் சான்றாக, இந்தியாவின் வட கிழக்கு மாநிலங்களையும், பிற மாநிலங்களையும், எஸ்.எஸ்.ஏ. அய்யர் அவர்கள் ஒப்பிட்டுக் கூறுகிறார். அவரது கூற்று:

> **“... வடகிழக்கு மாநிலங்களில், ஊழல் மிக மிக அதிகமாக உள்ளது; ஏனெனில், உள்ளூர் நிதி ஆதாரங்களையும், உள்ளூர் வரிவிதிப்பினையும் இம்மாநில அரசுகள் சார்ந்திராமல், மத்திய அரசிடமிருந்து பெறும் மான்யங்களையும் நிதிகளையும், இவைகள் சார்ந்திருப்பது தான்...”**

இந்நிலையில், நாம் பெறும் முடிவு என்னவெனில், ஊழலை அறவே, முற்றிலுமாக ஒழித்து விட முடியாது. மாறாக, பெருமளவு குறைத்திட இயலும் என்பதே. அரசு சார் துறைகளிலும், நிர்வாக மட்டங்களிலும் ஊழலைக் குறைத்திட முழுமுதற் தேவைகள் :

(1) அதிகாரம் பரவலாக்கப்படுதல்;

(2) அரசுச் செலவினங்களில் ஒளிவு மறைவு அற்ற திறந்த தன்மையும் (Openness), எல்லோரும் காணும் தன்மையும் (Visibility/ Transparency) இருத்தல்.

(3) தவிர, கிராமங்களுக்கு வேண்டிய திட்டங்கள், திட்டச் செலவினங்கள் போன்றவை, மேலிருந்து கீழே வராமல், அந்தந்தக் கிராமமே, அவைகளுக்குப் பொறுப்பாக இருத்தல்.

இதுதொடர்பாக, மூன்று விதக் கருத்துக்களை எஸ்.எஸ்.ஏ. அய்யர் முன்வைக்கிறார்.

www.tamilarangam.net



அதிகாரப் பரவலினால், ஜனநாயகம் எந்த அளவிற்குத் தழைத்தோங்கும் என்பதையும், அதனால் சாதாரண மக்களும் எவ்வாறு சுதந்திரம் எனும் உரிமையினை முழுமையாக அனுபவிக்கத் தொடங்குவர் என்பதனையும், மேலை நாட்டு அரசியல் அறிஞர்கள் கி.பி. **18–ஆம்** நூற்றாண்டிலேயே திட்டவட்டமாக எடுத்துரைத்துள்ளனர்.

(1) முதலாவது, **சார்நிலைத் தத்துவம் (Principle of Subsidiary)**. இதன் மையக் கருத்து என்னவெனின், அரசு நிர்வாகம், ஆட்சி, அதிகாரம் போன்றவற்றில், கீழ் மட்டத்திலே (Micro-Level) ஒரு திட்டம் செம்மையாகவும், திறமையாகவும், செலவு குறைவாகவும், நடத்தப்பட முடியுமென்றால், அந்நிலையிலேயே அத்திட்டம் முடிக்கப்பட வேண்டும் என்பதுதான், இந்த சார்நிலைத் தத்துவம். **ஐரோப்பிய ஒன்றியத்தின் (European Union)** செயல்பாட்டு வெற்றிக்கு, இந்தத் தத்துவம் கையாளப்பட்டதே காரணம்.

(2) இரண்டாவது, பரவலாக்கலின் மறுபக்கமாக, செலவிடும் அதிகாரப் பரவலாக்கம் உள்ளது. அவ்வாறாயின் வரிவிதிப்பு அதிகாரமும் பரவலாக்கப்பட வேண்டும். அப்போதுதான், சார்நிலை ஆட்சி அமைப்புகளிலும், நிறுவனங்களிலும், பொறுப்புணர்வும், கடமை உணர்வும் அதிகமாகின்றன.

(3) மூன்றாவதாக, கிராமங்கள், ஒன்றியங்களுக்குத் தேவையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, நிதி ஆதாரங்கள் தேவை. இதில் கணிசமான பகுதியினை, அந்தந்த ஊராட்சி அமைப்புகளேத் திரட்டிக் கொள்ள வேண்டும்; மிகுதியினை **இணை மானியமாக (Matching Grants),** மாநில அரசோ, மத்திய அரசோ தர வேண்டும். அப்பொழுது தான், '**யாருடைய பணமோ**' என்ற எண்ணம் மாறி, '**நமக்கும் இதில் பங்கு உண்டு**' என்ற எண்ணம் வளர்ந்து பொறுப்புணர்வும், கடமையுணர்வும் அடிமட்டத்தில் பெருகி, ஊழல் குறைந்திட வாய்ப்புகள் அதிகரிக்கும்.

சான்றாக, **ஃபிராங்காய்ஸ் க்விஸ்ஸாட்[17] (1787–1874)** என்ற அறிஞர் தம் நூலில் கூறுகிறார்:

[17] Francois Quizot : History of the Origin of Representative Government in Europe Excerpts-Published in (Ed.) E.K. Brahmsted and K.J. Melhuish, 1977, Western Liberalism pp. 577-582

www.tamilarangam.net



"சுதந்திர உரிமையினை முதல்நிலைப்படுத்தியுள்ள அரசியல் அமைப்புகளைப் பாதுகாப்பதில், ஊராட்சிகள் எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை மில் (John Stuart Mill : 1806-1873) அவர்களும், டாக்குவில்லே (Alexi Clerel de Tocqueville : 1805-1859) அவர்களும் வலியுறுத்தியது தற்செயலான ஒன்று அல்ல. மத்திய அரசினைத் தவிர ஊராட்சிகள் பயன்மிக்கவை; எவ்வாறெனின், ஊராட்சிகளின் பெரும்பாலான நடவடிக்கைகளில், மக்கள் பங்கேற்க இயலும். "நகர்ப்புறக் கூட்டங்களே, சுதந்திரத்தை எதிர்நோக்கியவை" என டாக்குவில்லே கூறுகிறார். டாக்குவில்லே மேலும் கூறுகிறார்: "அறிவியலுக்கு ஆரம்ப பள்ளிகள் எப்படியோ அவ்வாறே, சுதந்திர உரிமையும் (Liberty)" முனிசிபல் (மற்றும் ஊராட்சி) அமைப்புகளும். ஆரம்பப் பள்ளிகள் அறிவியலை, மக்களிடம் கொண்டு செல்கின்றன. அறிவியலை எவ்வாறு பயன்படுத்துவது, என்பதையும் அதனை மக்களுக்கு அனுபவ பூர்வமாக ஆக்குவது எவ்வாறு என்பதையும், மக்களுக்கு ஆரம்பப் பள்ளிகள் கற்றுத் தருகின்றன. கட்டுப்பாடுகள், குறைந்த ஓர் அரசாங்கத்தினை, ஒரு தேசத்தால் அமைத்துக் கொள்ள இயலும். ஆனால் முனிசிபல், (ஊராட்சிகள்) அமைப்பு எனும் ஆன்மா கொண்டிராத அந்த அரசாங்கம், சுதந்திரமான ஆன்மாவைக் கொண்டிருக்க இயலாது...!" பிரதிநிதித்துவ அரசமைப்பிற்கு மக்களைத் தயார்படுத்தி, அவைகளோடு மக்களை இணைக்கும் முனிசிபல் (உள்ளாட்சி)நிறுவனங்களை 'இயல்பான பள்ளிகள்' (Normal Schools) என்றும் கூறி, இதே நிலைப்பாட்டினைத் தான் மில் (Mill) அவர்களும் மேற்கொண்டார். 'தன்னார்வக் குழுக்களின் வாயிலாகவோ, முனிசிபல் (ஊராட்சி) அமைப்புகள் வாயிலாகவோ, மக்களைப் பரந்த அடிப்படையில் உள்ளிணைக்கும் அரசாங்கமே, செயல்படும் உண்மையான ஜனநாயகமாக இருக்க முடியும். இத்தகையப் பங்கேற்பின் வாயிலாகத்தான், சமூக மற்றும் அரசியல் தள உண்மை நிலைகளை மக்கள் அறிந்து கொள்ள இயலும். மேலும், மற்றவர்களின் கருத்தை அறிந்து கொள்ளுவதின் வாயிலாக, எல்லா மக்களும் தொடர்ந்து அறம் சார்ந்த பக்குவம் அடைகின்றனர். மாற்று அதிகாரங்கள் அனைத்தும், மைய அரசில் குவிந்திருப்பது, தற்சார்பினையும், பகுத்தறிவுள்ள முன்கணிப்பு

www.tamilarangam.net



**நோக்கையும், புறந்தள்ளிவிட்டு, தன்னல வேட்கையைத் தவிர மற்றெல்லாம் வளருவதையும் தடை செய்து விட்டு, அறஞ்சார்ந்த வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிப்பதாக உள்ளது..."**

எனவே, அரசியல் ஊழலைப் பெருமளவு குறைத்திட, ஒரு வழி யாதெனின், அரசியலதிகாரத்தையும், பொருளாதார அதிகாரத்தையும் **ஜனநாயக முறையில் பரவலாக்குவது (Democratic Decentralization)** தான். க்விஸ்லாட் அவர்கள் கூறுவதைப் போன்று, ஒரு கிராமத்தில் தொடக்கப்பள்ளிகள் எவ்வாறோ அவ்வாறே கிராம ஊராட்சி மன்றங்களும். தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியரும், பிற ஆசிரியர்களும் ஒரு கிராமத்தில் எந்த அளவு அதிகாரம் கொண்டவராக இருக்கின்றார்ரோ, அதைப் போன்றே, கிராமத்து ஊராட்சித் தலைவரும், உறுப்பினர்களும் அதிகாரமும், அதிகார வரம்பும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

அப்போதுதான். அமர்தியா சென் அவர்களின் **'பொருளாதார முன்னேற்றமே சுதந்திரம்** (Development as Freedom) என்ற எதிர்பார்ப்பு நிறைவேறும். **வர்ணாஸ்ரம தர்மம் ஒழித்த, சாதியம் ஒழித்த கிராமக் குடியரசுகளே**, இவ்வெதிர்பார்ப்பை, இக்கனவினை நனவாக்கும்; இவையே இன்றையத் தேவையுமாகும்.

www.tamilarangam.net



## முடிவுரையாக...

இதுகாறும், இந்நூலினைப் படித்த வாசகர்கள் மனதில் பல கேள்விகள் எழலாம்; அவற்றுள் சிலவும், அவைகளுக்குகான பதில்களும்:

**அ) பஞ்சாயத்து முறை ஒன்றே ஊழலை ஒழித்திடுமா?**

இதற்கானப் பதில் **இல்லை** என்பதே. ஊழலை **அறவே** ஒழித்திட இயலாது. இருப்பினும், அதனை வெகுவாகக் குறைத்திடலாம். அதற்கு ஒரு வழிதான் பஞ்சாயத்து முறை.

**ஆ) ஊழலின் ஊற்றுக்கண்கள் யாவை?**

மனித மனமே ஊழலின் தோற்றுவாய். **"ஓடும் பொன்னும் ஒக்கவே நோக்கும்"** பண்பாளர்கள் அல்லர், சராசரி மனிதர்கள். எதையும் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்ற **"உயிர்–உணர்வு"** ஒவ்வொருவரின் ஆழ் மனத்திலும் உள்ளது. **"பாலுணர்வுச் சக்தி (Libido)"** என்று இதனை உளவியல் அறிஞர் **சிக்மண்ட் ஃபிராய்ட் (Sigmund Freud)** குறிப்பிடுவார். தமிழில் இதனை **ஆணவம்** என்று கூறலாம்.

எனவேதான் **"ஆணவத்தை அழி, ஆசையை அடக்கு"** என்று சமயப் பெரியோர்கள் கூறினர். எதையும் தனதாக்கி, தன்னுள் அதனை கரைத்துக் கொள்ள விரும்புவதே ஆணவம். ஆசை என்பது ஆணவத்தின் புறத்தோற்றம் ஆகும்.

**கௌதம புத்தரும், கிறிஸ்து இயேசுவும், இந்திய ஞானிகளும், முனிவர்களும்,** தன்னை மறுத்து, ஆணவத்தை அழித்து, ஆசையை அடக்கி வாழ்ந்தனர். தன் சீடர்களும் அவ்வாறே வாழ வேண்டும் என்று கட்டளையும் இட்டனர். ஆனால், சாதாரண மனிதர்கள், இவர்களைப் போன்றவர்கள் அல்லர்.

தவிர, கி.பி. 18–ஆம் நூற்றாண்டில், மாபெரும் **தொழிற் புரட்சி (Industrial Revolution)** ஒன்று, இங்கிலாந்தில் தோன்றியது. **உலக முதலாளித்துவம் (World Capitalism)** இதில்தான் கருக்கொண்டது. இந்த முதலாளித்துவக் கலாச்சாரத்தின் அடிப்படைகள் தாம், ஊழலின் ஊற்றுக் கண்களாக உள்ளன. அவைகள் :

1. தான், தமக்கு – எனச் சொத்துக்களை உருவாக்குவதே வாழ்வின்நியதி (Property Career) என்ற நிலை ;
2. வருமானம், ஆதாயம் தரும் பொருள்களையும்

www.tamilarangam.net



சொத்துக்களையும் தனக்கெனச் சேர்த்துக் குவிக்கும் (Accumulation Drive) போக்கு;

3. எல்லையில்லாது பெருகி வரும் நுகர்வுக் கலாச்சாரம் (Consumer Culture)

4. எல்லாமே வணிக மயமாதல் (Commercialization).

**குடிநீர், உணவு, கல்வி, மதம், மருத்துவம்** – ஆகிய இவைகள் கூட இன்று இலாபகரமான வியாபாரப் பொருள்களாக (Merchandise) மாறிவிட்டன.

எனவேதான், இன்றைய மேலைநாட்டுப் பொருளாதார அறிஞர்கள், **காந்தியப் பொருளாதாரச் சிந்தனைகளை** நோக்கி, தம் கவனத்தைத் திருப்பி உள்ளனர். அறவழி வாழ்க்கையும், மனித நேயப் பண்பும் மிகவும் தேவை என்பதே காந்திய சிந்தனையாகும்,

**இ. சோழர் காலத்தில், பஞ்சாயத்து முறைகள் சிறந்தவை என்றும், அவை இக்காலத்திற்கு ஏற்றவை என்றும் கருத்து நிலவுகிறதே?**

பஞ்சாயத்துகள் பற்றிய நூல்[1] ஒன்று சோழர்காலத்தின் பஞ்சாயத்து அமைப்புகளைப் பற்றி பின் வருமாறு கூறுகிறது :

**"சோழர்காலத்தில், உள்ளாட்சி அமைப்பு முறை நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தது என்பதற்கான போதுமான ஆதாரங்கள் உள்ளன. சோழர்காலத்திலிருந்த பஞ்சாயத்துகள் பத்து மற்றும் பதினோராம் நூற்றாண்டுகளில் ஆற்றல் மிகுந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான கருவியாக இருந்தது"**

**– என நகர்ப்புற பஞ்சாயத்துகளின் நிதிவள ஆதாரங்களுக்கான குழு சரியாகக் கூறியுள்ளது. சமுதாய வாழ்விற்கான அனைத்து வழி முறைகளையும் அவர்கள் கட்டுப்படுத்தி வந்தனர். ஒவ்வொரு கிராமங்களிலும் உள்ள வயது வந்த ஆண்களைக் கொண்டு, கிராம மக்கள் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இதுவே, கிராம சங்கங்களின் மைய அமைப்பாக இருந்திருக்கிறது. மற்றும் ஊர், சபா, நாடு, நகரம் போன்ற சங்கங்கள் இருந்தன. இந்தச் சங்கங்கள்**

1. சட்ட ஆதாரம் மற்றும் சமூகச் செயல் பாட்டு மையம், செங்கல்பட்டு, 1992 : சமூகச்செயல் பாட்டாளர்களுக்கான சட்டப் பயிற்சிக் கையேடு, 1992, பக். 1.

www.tamilarangam.net



**சட்ட பூர்வமான அந்தஸ்தைப் பெற்று, தனித்தனியே மற்றும் தன்னிச்சையான அமைப்புகளாகச் செயல்பட்டு வந்தன."**

தற்போது, இக் கருத்துக்களைப் பற்றி, சுருக்கமாக நாம் ஆராயலாம்.

சோழர்கால பஞ்சாயத்து அமைப்புகளைப் பற்றி, ஏ.எஸ். அல்டேகர்[2] பின்வருமாறு கூறுகிறார். சோழர்களின் காலம், கி.பி. 900 – 1300 ஆகும். பெரும்பாலும் பிராமணர்கள் வசிக்கும் அக்கிரகாரங்களுக்கு உரிய பஞ்சாயத்துகள் **சபா (Subha)** என்றும், மற்றவர்களுக்கான பஞ்சாயத்துகள் **ஊர் (Ur)** என்றும் அழைக்கப்பட்டதாக, உத்திரமேரூர் சாசனங்களிலிருந்து அல்டேகர் சான்று காட்டுகிறார். ஒரு சில கிராமங்களில், இரண்டுமே செயல் பட்டன எனறும். அவர் கூறுகிறார்.

**கிராமப் பொது அவை (Primary Village Assembly)** என்பது கிராமத்து மக்கள் எல்லோரையும் கொண்டதாக இருந்தது. கிராமத்தின் **ஆட்சிக் குழுவை (Village Executive Council)** தேர்ந்தெடுப்பதற்காக கிராமப் பொது அவை கூடியது. இந்த ஆட்சிக் குழுவை, **ஆளுங்கணம் (Alunganam)** என்று அழைத்தனர். இந்த ஆட்சிக் குழுவிலும், அது அமைக்கும் வாரியங்களிலும் பணிபுரிந்திட மூன்று அடிப்படைத் தகுதிகள் ஒருவருக்கு வேண்டும்:

1) அவருடைய வயது 35 –ற்கு மேல் 70–க்குள் இருக்க வேண்டும்.

2) அவருக்கு சொந்தமாக ஒரு வீடு இருக்க வேணடும்.

3) அவருக்கு ¼ வேலி நிலம் அதாவது இரண்டு ஏக்கர் நிலமாவது சொந்தமாக இருக்க வேண்டும்.

இங்குதான், **நில உடமைச் சாதிகள் (Landed Castes) ஆளுமை சாதிகளாகவும் (Ruling Castes) மேலாண்மைச் சாதிகளாகவும் (Dominant Castes)**, பிற்காலங்களில் மாறுவதற்கான தளம் தமிழகத்தில் உருவாகியது.

ஏனெனில், சோழர் கால உள்ளாட்சி அமைப்புகளிலிருந்தும், அதன் அதிகார மையங்களிலிருந்தும், பெண்களும், சொத்து மற்றும் செல்வம் இல்லாத ஏழைகளும் அறவே விலக்கப்பட்டனர். தவிர, கிராமத்திலிருந்தே விலக்கி வைக்கப்பட்ட மக்களும் உண்டு. அதாவது, சோழர்காலத்தில் தான், **"தீண்டத்தகாதோர் (Untouchables)"** என்று, ஒரு பிரிவு மக்கள் முத்திரை குத்தப்பட்டு, ஊருக்கு வெளியே நிறுத்தப்படுகின்றனர்; சமுதாயத்திற்கு

2. A.S. Altekhar (1958) : State and Government in Ancient India, PP 225 - 245.

www.tamilarangam.net


அப்பால் புறந்தள்ளப்படுகின்றனர். இதனைப்பற்றி, புதுவை, இந்திய இயல்துறையின் பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தைச் சார்ந்த கோ. விசய வேணுகோபால்[3] கூறுகிறார் :

".... மனுதர்ம சாத்திரம் முதலான நூல்களில் காணக்கிடக்கின்ற இந்த தீட்டுக் கோட்பாடு, சோழர் காலத்தேதான் தமிழகத்தில் தலை தூக்குகிறது. முதலாம் இராசராசனுடைய கல்வெட்டு ஒன்றில், "தீண்டாச்சேரி" என ஊர்ப் பகுதி குறிப்பிடப் படுகின்றது. இங்குதான், முதன் முதலில், தீண்டுதல் அல்லது தொடுதல், உயர்ந்த நிலை, தாழ்ந்த நிலை மக்களிடையே கூடாத ஒன்றாகக் கருதப்பட்டமை தெளிவாகிறது. "தீண்டாமை" எனும் வட நெறிக் கோட்பாடு, சோழர் காலத்தே வழக்கு பெற்றமை, இராசராசரின் கல்வெட்டால் புலனாகிறது.

"புதுவை மாநிலத்தைச் சேர்ந்த பாகூரில் உள்ள திருமூலநாதர் திருக்கோவிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு, தீண்டாமைக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஊரில் வாழ்ந்த ஒரு மக்களை, தீண்டாதார் எனக் குறிப்பிடுகிறது. முதலாம் இராசராசன் காலத்திலேயே முதலாம் இராசேந்திரனும் இளவரசனாக விளங்கியமையை, வரலாற்று ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். எனவே, கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி வாக்கில், இக்கோட்பாடு உரம்பெற்று விட்டது எனக் கருதலாம்."

அந்தக் கல்வெட்டு, முதலாம் இராசேந்திர சோழனின் 16 ஆம் ஆட்சியாண்டில் (01–12–1027), பாகூர், திருமூலநாதர் கருவறை மேற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளதாக, கோ. விசய வேணுகோபால் கூறுகிறார். அவர் சான்று காட்டிய அக்கல்வெட்டின் ஒரு பகுதி :

"8..தொரு மாவாக மாத்தால் எண்ணாழி கொள்ளும் கங்கை கொண்ட சொழன் மரக்காலால் கைய்செய்வாரத்தெய் நெல்லு இரு தூணியும் ஆட்டாண்டு தொறும் பொகங்கடொறும் அவ்வாண்டு எரிவ (ா’) ரியஞ் செய்வாரெ எரி ஆய்யமாகக் கொள்வராகவும் புறவூர் இருந்து இவ்வூர் உழுத குடிகளை எரியாய மல்லது மற்று

3. டாக்டர் கோ. விசய வேணுகோபால் (1997), தீண்டாமை எனும் கருத்துருவாக்கம், தலித், ஜூலை 1997, பக்.46 – 48.

www.tamilarangam.net



**இறை கொள்ளப் பெறாதாராகவும் இவ்வூரிலும் இவ்வூரொடும் எறினவர்களிலும் இருந்தாரில் திண்டாத (ர') ரொழிய நிக்கி நின்றாரில் பத்து வயஸுக்கு மெல் எண்பது வயஸு"**

சமூகத்தின் ஒரு பிரிவு மக்களை, தீண்டாதோர் என்று தாழ்த்தி, ஒதுக்கி, சமூகத்திற்கு அப்பால் புறந்தள்ளக் காரணம் என்ன? இதன் அடிப்படையானக் காரணம், சோழர்கள் அங்கீகரித்து ஏற்றுக் கொண்ட **"பெருந்தெய்வ வழிபாட்டுக்"** கலாச்சாரமாகும். இதன் விளைவாக, **"சிறு தெய்வ வழிபாடு"**[4] விளிம்புறு நிலைக்கு தள்ளப்பட்டது. மேலும், சோழர்கள் புதிதாக அங்கீகரித்த சமூக நிறுவனங்களும், சிறு தெய்வ வழிபாட்டுக் குருக்களையும், மக்களையும் **தீண்டத்தகாதோர்** என்று முத்திரை குத்தி, ஊருக்கு வெளியே நிறுத்தின.

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக, அடித்தள மக்கள் கிராம நிர்வாகத்தில் நேரடியாக பங்குபெற இயலவில்லை. மகளிரும் இந்த அமைப்புகளில் இருந்து அகற்றப்பட்டே இருந்தனர். இருப்பினும் அடித்தள மக்கள், உள்ளாட்சி அமைப்புகளில், ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு பெறும் வண்ணம், பஞ்சாயத்து அமைப்புச் சட்டத்தினைக் கொணர்ந்திட முயற்சி எடுத்தவர் மறைந்த இந்தியப் பிரதமர் **இராஜீவ் காந்தி** ஆவார். ஆனால் அதை, அரசியல் சாசன சட்டத் திருத்தம் 73–ன் வாயிலாக, 1993–ஆம் ஆண்டு முதல் அமல் படுத்தியவர், முன்னாள் இந்தியப் பிரதமர் **நரசிம்மராவ்** ஆவார்.

தாழ்த்தப்பட்டோருக்கும், மகளிருக்கும், அடித்தள மக்களுக்கும், குறுங் குடியரசுகளில் நேரடியாகப் பங்கேற்கும் நிலை, தற்போது ஏற்பட்டுள்ளது; அவர்களுக்கென இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, கடந்த 1993–ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 73–ஆவது அரசியல் சாசன சீர்திருத்தத்தின் உண்மையான நோக்கங்கள் :

★ அடித்தள மக்களிடமும் ஆட்சியும் அதிகாரமும் சென்றடைய வேண்டும்.

★ மகளிரும் இவ்வமைப்புகளில் நேரடியாகப் பங்கேற்று, தலைமை ஏற்க வேண்டும்.

★ கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள், சமூக மாற்றத்தின் மாபெரும் கருவிகளாக மாறவேண்டும்.

**(ஈ) உலகமயமாதல் (Globalization), தாராள மயமாதல் (Liberalization) என்ற இன்றையச் சூழலில், தேச–அரசுகளே (Nation - States)**

4. ஒப்பிடுக : அப்பர், தேவாரம் : '...சென்று நாம் சிறு தெய்வம் சேரோம் அல்லோம்...'

www.tamilarangam.net



**வலுவிழந்து விடுமோ என்ற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே,இன்றைய இந்தச் சூழலில், கிராமப் பஞ்சாயத்துகள் வாயிலாக, ஊழலைக் குறைக்கலாம் என்ற வாதம் பொருந்தாத வாதம் தானே?**

இக்கேள்வி, மிக ஆழமான ஒன்று, இதற்கு பதில் தரவேண்டுமாயின், முதலில், **தேச—அரசு (Nation - State)** என்பதிலிருந்து தொடங்கவேண்டும்.

தேச—அரசு என்ற அரசியல் தத்துவத்தினை முதன் முதலில் தந்தவர் **ஃபிரெடரிச் லிஸ்ட் (Frederich List,** 1749 - 1846) என்ற ஜெர்மனிய அறிஞர். உலக முதலாளித்துவக் கருத்தோட்டத்தின் தந்தை எனக் கருதப்படும் **ஆடம் ஸ்மித் (Adam Smith** 1723 - 1790) அவர்களோடு லிஸ்ட் முரண்பட்டார். இதற்கு லிஸ்ட் கூறிய காரணம் **"தேசத்தை ஸ்மித் புறக்கணித்தார்"** என்பதே. தாராள வணிகக் கொள்கை (Free Trade) பற்றி, லிஸ்ட் அவர்கள் அன்று கூறியது, இன்றும் பொருத்தமாக உள்ளது. அன்றைய பிரிட்டிஷ் பேரரசினை மனதிற் கொண்டு, லிஸ்ட்[5] அவர்கள் பின் வருமாறு கருதியதாக ராபர்ட் லெக்காச்மேன் கூறுகிறார்:

> **"வரலாறு தந்த பாடங்களில் இருந்து அவர் (லிஸ்ட்) தன்னுடைய கொள்கைகளை உருவாக்கினார். உலகம் அனைத்திலும் சமாதானம் நிலவிடுமாயின், தாராள வணிகக் கொள்கை என்பது, மிகவும் போற்றத்தக்க ஒன்றாக இருக்கும். ஆனால், தேசங்களின் இறையாண்மையினையும், தேசங்களிடையே நிலவிடும் போட்டியினையும், அவற்றுக்கு உரிய முக்கியத்துவத்தோடு நாம் காண்போமாயின், தற்போது ஒன்று விளங்கும்: இங்கிலாந்தின் ஆதிக்கம் மேலும் விரிவடையவே, இந்த தாராளமய வர்த்தகம் துணைபுரியும்"**

இன்றய நிலையில் இந்தியா உள்ளிட்ட அனைத்து வளரும் நாடுகளுக்கும் மிகவும் பொருத்தமான கருத்து இது. எவ்வாறு?

தற்போது உலகின் ஒரே பேரரசாகத் திகழும் அமெரிக்காவின் **ஃபெடரல் கருவூலம் (Federal Treasury), ஹார்வேர்ட் வணிகப்பள்ளி (Harvard Business School), புரூக்கிங்ஸ் நிறுவனம் (Brookings Institution)** போன்ற **20** அமைப்புகள், இன்று உலக நாடுகளுக்கான பொருளாதார

---

Robert Lekachman (1959) : A History of Economic Ideas, pp 301 - 303

www.tamilarangam.net


திட்டங்களை வகுக்கின்றன. இவற்றை **வாஷிங்டன் ஒத்த கருத்துருவாக்கம் (Washington Consensus)** என்று அழைப்பர். அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகளின் மேலாண்மையே இதன் அடிப்படைக்குறிக்கோள். இந்த அடிப்படையை மனதிற் கொண்டு, தற்போது அமெரிக்காவின் **மெஸ்ஸாசுசெட்ஸ் இன்ஸ்ட்டியூட் ஆஃப் டெக்னாலஜியினைச் (Massachusetts Institute of Technology)** சேர்ந்த **பேராசிரியர் நவோம் சோம்ஸ்கி (Naom Chomsky)**[6] அவர்கள் என்ன கூறுகிறார் என்பதை நாம் காண்போம்.

**'உலகமயமாதல்'** என்பது குறித்து, பெரும்பாலும் ஒத்த கருத்து நிலவுகிறதே என்று கேட்கப்பட்டதற்கு, பேரா. சோம்ஸ்கி கூறுகிறார் : ஏழைகளும், பாதுகாப்பற்றவர்களும், எளியவர்களும் அங்காடியின் கட்டுப்பாட்டிற்குள் (Market Discipline) அடங்கவேண்டும்; ஆனால் செல்வந்தர்களும், அதிகார வர்க்கத்தினரும், அரசின் பாதுகாப்பில் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு, பயன் அடைந்து வாழ வேண்டும் என்பதே அந்த ஒத்தக் கருத்து.

தவிர முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள், வங்கி உரிமையாளர்கள், மற்றும் மேலாண்மையாளர்கள், செல்வந்தர்கள், மிகுந்த வருமானம் தரும் தொழில் நடத்துபவர்கள் (Rich Professionals), அரசியல் மேல்மட்டத்தினர் (Political Elites) - போன்றோரின் நலன்களை பாதுகாப்பதற்காகத்தான் இன்றைய முதலாளித்துவமும் தாராளமயமாக்கலும் உருவாக்கப்பட்டு வருகின்றன என்றும் சோம்ஸ்கி கூறுகிறார்.

பேராசிரியர் சோம்ஸ்கி கூறும் மற்றொரு கருத்தமைவு, இன்றைய நிலையில், முற்போக்குச் சிந்தனையாளர்கள் அனைவரையும் வேதனையில் ஆழ்த்தும். அதுதான், **புறக்கணிப்பு மக்கள் (Disposable People)** என்பதாகும் இச் சொல்லை சரிவரப் புரிந்து கொள்ள, இரண்டாம் உலகப் பெரும்போரின் போது, யுத்த களத்தில் பயன்பட்ட **டிரையேஜ் (Triage)** என்ற **ஃபிரெஞ்ச் (French)** சொல்லினை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

போர்முனையில் காயம்பட்டு விழுந்தவர்களை, மூன்று வகையினராக இராணுவத்தினர் பிரிப்பர். உடனடி சிகிச்சைக்குப்பின், யுத்தகளம் சென்று போரிட வல்லவர், முதல்வகை. சில நாட்கள் சிகிச்சை பெற்று, பின்னர் போர்க்களம் செல்வோர், இரண்டாம் வகை. மூன்றாம் வகையினர், எந்த

---

[6] 'America is one of the Most Fundamentalist Cultures' : E-mail Interview by Sandipan Deb and Promita Shastri of Naom Chomski, Outlook, Jan - 3, 2000 pp 94 - 98.

www.tamilarangam.net


சிகிச்சை கொடுத்தும் தேறாதவர்கள். இராணுவத்திற்கும், சமுதாயத்திற்கும், இவர்கள் பெரும் சுமையாக மாறிப்போனவர்கள். ஆகவே அந்நிலையிலேயே புறக்கணிக்கப் பட வேண்டியவர்கள்.

சமூகத்தளத்தில், இன்று காணப்படும் **டிரையேஜ்** நிலையில் உள்ள மக்களையே **புறக்கணிப்பு மக்கள்** என்று பேராசிரியர் சோம்ஸ்கி கூறுகிறார்.

**"நகர்ப்புறச் சேரிகளிலும், சிதறிக் கொண்டிருக்கும் கிராமப்புறச் சமுதாயங்களிலும், கவனிப்பாரற்று, நலியும்படி விடப்பட்டோ, சிறையில் தள்ளப்பட்டோ, இந்தப் புறக்கணிப்பு மக்கள், சமுதாயத்திலிருந்து அகற்றப்படுகின்றனர்."**

இன்றைய அடித்தளத்து மக்களில், பெரும்பாலோர் இந்த புறக்கணிப்பு மக்களே. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்திடும் மக்கள் – மகளிர், சிறார்–தொழிலாளர்கள், பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் –ஆகியோர் இந்தப் புறக்கணிப்பு மக்களாகக் கருதப்பட்டு, அரசாலும் சமூகத்தாலும் அலட்சியப்படுத்தப்படுகின்றனர். அதே போன்று, தங்களின் **வாழ் நிலங்களை (Natural Habitat)** இழந்து, பொருளாதார வளர்ச்சி என்ற பெயரால் **புலம் பெயர்க்கப்பட்டிருக்கும் (Displaced)** இலட்சக் கணக்கானப் பழங்குடி மக்களும் இதில் அடங்குவர். இன்றைய பொருளாதாரச் சீர்திருத்தங்களினால் விளையும் எந்த பலன்களும், பெரும்பாலும் இவர்களைச் சென்றடைவதில்லை.

உலகம் போற்றும் சிந்தனையாளர்கள் பலர், பேரா. சோம்ஸ்கியைப் போன்றே, சமூக அக்கறையும், சமூகஈடுபாடும் கொண்டவர்கள். இத்தகையோரில், நம் குடியரசுத் தலைவர் **கே.ஆர். நாராயணன் (His Excellency Shri. K.R. Narayanan, President of India)** அவர்களும் ஒருவர். இந்தியக் குடியரசின் ஐம்பதாவது பொன்விழா ஆண்டு உரை நிகழ்த்தும் போது:[7]

**"நம்முடைய பொருளாதார வளர்ச்சியின் பலன்கள், இவர்களைச் சென்றடையவில்லை. உலகின் தொழில் வள வல்லுநர்களில், பெரும் எண்ணிக்கையினரை நாம் கொண்டிருக்கின்றோம்; அதே சமயம், உலகின் அதிக அளவிலான எழுத்தறிவற்றவர்களையும் நாம் கொண்டிருக்கின்றோம். உலகின், பெரிய மத்தியதர வகுப்பு நம்மிடம் உண்டு; அதே நேரத்தில், சத்துணவுக் குறைவினால்**

[7]Quoted in : V. Venkatesan : A Wake - up Call,
Front Line, Feb. 18, 2000, pp 28 - 30

www.tamilarangam.net



**நலிவுறும் குழந்தைகளையும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களையும் உலகிலேயே அதிக அளவில் நாம் கொண்டிருக்கின்றோம். ஏழ்மை, இல்லாமை, இவற்றின் மத்தியிலிருந்துதான், நம்முடைய இராட்சதத் தொழிற்சாலைகள் எழும்புகின்றன. சேறும், சகதியும் நிறைந்த ஏழைகளின் பொந்துகளின் மத்தியிலிருந்துதான், நமது விண்கலங்கள், விண்ணோக்கிப் பாய்கின்றன. தங்களுடைய நிலைகுறித்த ஒரு மந்தமான வெறுப்பு, ஏழை எளிய மக்களிடையே இன்று நிலவுகிறது. நாட்டின் பல்வேறு இடங்களில் இதுவே, வன்முறையாக வடிவம் கொள்கிறது."**

– என்று கூறுகிறார். மேலும், இது குறித்து, நாட்டுமக்களுக்கு ஓர் எச்சரிக்கையினையும் அவர் விடுக்கத் தவறவில்லை:

**"புதுப் பணக்காரர்களால் (Noveau-riche), இன்று மேற்கொள்ளப்படும் ஆடம்பரமான பகட்டு நுகர்வு, அடித்தளத்து மக்களை ஏமாற்றத்தினால் பொறுமிக் கொண்டிருக்கும் மக்களாக மாற்றி உள்ளது. நமது சமுதாயத்தின் சரி பாதி மக்கள், பாட்டில்களில் அடைக்கப்பட்ட பானங்களைக் குடிக்கின்றனர். மறுபாதி மக்களோ, சேறும் சகதியும் உள்ள நீரை, கையால் அள்ளிக் குடிக்கின்ற நிலையில் உள்ளனர். தாராளமய மாக்கம், தனியார்மயமாக்கம், உலகமயமாக்கம் என்ற மூன்று தடங்கள் கொண்ட விரைவுப்பாதையின் நடுவே, அதிகாரமயமாக்கப் படாத அடித்தள மக்களுக்கென்று,பாதுகாப்பான ஒரு பாதசாரிப் பாதை வேண்டும். அப்போதுதான், சமூக அந்தஸ்திலும், வாய்ப்புகளிலும், சமநிலை என்ற இலக்கு நோக்கி இந்தியா இயங்கிட இயலும். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்று பழைய பழமொழி கூறுகிறது. நாம் கூறலாம் : நீண்ட நெடுங்காலம் துன்புறும் பொறுமைசாலிகளான மக்களின் உக்கிரக் கோபம் மிகவும் ஆபத்தானது என்று."**

– என்று கூறுகிறார். இங்கு, நாமும் ஒரு சில உண்மைகளைக் காணலாம். வைட்டமின் – ஏ குறைவின் காரணமாக, ஆயிரக் கணக்கானக் குழந்தைகள் கண்பார்வைக் குறைவினால் அவதியுறும் நம் நாட்டில் தான், தலைமுடி செழுமைக்கு முட்டை ஷாம்பூவும், வைட்டமின் ஷாம்பூவும் விளம்பரப் படுத்தப்படுகின்றன. எழுத்தறிவற்றவர்கள், ஏறத்தாழ 50% இருக்கும் நம் நாட்டில்தான், பங்குச்சந்தை குறியெண்களைக் காட்டி, இந்தியப்

www.tamilarangam.net


பொருளாதாரம் எந்த அளவிற்கு வளருகிறது என்று பெருமிதம் கொள்கிறோம். ஏறத்தாழ, 40 கோடி மக்கள், இரவு உணவு இல்லாது ஒவ்வொரு நாளும் தூங்கச் செல்லுகின்றனர் என்ற நம் நாட்டின் உண்மை நிலையை மறந்து, **பிஸ்ஸா ஐஸ்கிரீம் (Pizza Ice Cream)** பற்றியும், **கென்ட்டகி வறுத்த கோழி (Kentucky Fried Chicken)** பற்றியும், புதுரக கார்கள் உற்பத்தி பற்றியும், நாம் பேசுகிறோம். **சமூக உணர்வு என்பது, மத்திய தர வகுப்பு மக்களிடையேதாம் மிக அதிகமாக இருத்தல் வேண்டும். ஆனால் நமது மத்திய தர வகுப்போ சமூக உணர்வும், சமூக அக்கறையும் மிகவும் குன்றிய ஒரு வகுப்பாகவே உள்ளது.**

இந்நிலையில்தான், கிராமப் பஞ்சாயத்துகளின், பங்கும் பணியும் அதிகமாகின்றன.

☞ விளை நிலங்கள் வீட்டுமனைகளாக, தனியாரின் வணிக மையங்களாக மாற்றப்படுவதையும்;

☞ கிராமத்திற்குச் சொந்தமான **பொதுப்பயன் சொத்துக்கள் (Common Property Resources)**, அரசியல்வாதிகளால் ஆக்கிரமிக்கப் படுவதையும்;

☞ எத்தனையோ அடித்தளக்குடும்பங்களைச் சீரழித்து சின்னா பின்னமாக்கும் குடியினையும்;

☞ நிலங்களும் தோட்டங்களும் பொருளாதார வளர்ச்சி என்றபெயரில் சுற்றுச்சூழல் மாசுபடும் மையங்களாக மாற்றப்படுவதையும்;

☞ சாதிக்கொடுமைகள்; பாலியல் வன்முறை சிறார்-தொழிலாளர்-போன்ற கலாச்சாரத்தையும்,

-கிராம மக்களும் கிராமப் பஞ்சாயத்துக்களும் எதிர்கொண்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, தங்கள் கிராமங்களில் இவை செயல் படாதவாறு தடுத்திட வேண்டும்.

அப்போதுதான், உண்மையானக் குடியரசுகளாக கிராமப் பஞ்சாயத்துகள் மாறும்; நம் நாட்டில் பெருகியுள்ள நிர்வாக ஊழலும் பெருமளவு குறையும்.

www.tamilarangam.net

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

www.tamilarangam.net



Professor P.S. PANNEER SELVAM, retired Principal, Muthurangam Govt. Arts College, Vellore is now heading the CADS (Centre for Alternative Development Studies, Chennai-99). The CADS is a Non-Governmental Organization committed to the cause of securing rightful space of human dignity, empowerment and honour to the 'marginalized' and the 'disoriented people' - or 'the Unempowered India'.

Prof. Panneerselvam hails from a humble yet dignified family in Thanjavur District. After a briliiant academic career, he joined the Collegiate Education Department of Tamil Nadu as an Economics teacher, and by sheer hard work, integrity and unstinted devotion to the cause of higher education, he rose to the position of Principal. His unblemished service as a teacher and scholar, has been marked by his enduring concern for the students of weaker sections, - his life long passion, which has earned him many a laurel from both the academia and the general community.

As an author, he is a forceful writer, and his writings are always in the nature of path-breaking endeavours, bringing awareness to all, especially the dumb and downtrodden. He never ceases just with making people understand the reality, but complements his task by instilling in them especially amongst the unempowered India, a new sense of confidence and self-assertion by showing them the alternative and radical paths they have to take on, if at all they are to be liberated from all the shackles and chains they have been imposed with from times immemorial.

He is a gifted orator both in English and Tamil, and his speeches would always break fresh grounds and open up new vistas of hope and promise, especially to the marginalized millions of society. Further, his haunting eloquence, punctuated by scintillating wit and rare insights, normally used to take by horns the forces of orthodoxy and status-quo, which safeguard and perpetuate the age-long social structures of discrimination, exclusion and oppression.

The DAMEA, printers take pride in presenting this small book to the Tamil-knowing population' across the world.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்